உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கங.] ஆனந்த௵ பங்குனிமீ [பகுதி-ரு.

Vol. XIII. March—April, 1915. No. 5.

சாசனபரீக்ஷை.*

சாசனபரீக்ஷையால் என்னபயனுண்டென்று சிலர் வினவுகின்றனர். சாசனபரீக்ஷையாற் பலபயன்களுண்டு. நம்முடையநாட்டுச்சரித்திரங்களெழுதுவதற்குவேண்டியவிஷயங்களெல்லாம் இந்தப் பரீக்ஷையால் வெளிப்படுகின்றன. இச்சாசனபரீக்ஷையாற்றான் சோழ, பாண்டிய, பல்லவ முதலியவமிசங்களின்சரித்திரங்கள் எழுதிமுடிந்தன. இதைக்கொண்டுதான் மற்ற அரசர்களின்சரித்திரங்களையும் எழுதிமுடிக்கலாம். சாசனபரீக்ஷையின் முக்கிய உபயோகம் சரித்திரத்துக்குவேண்டியவிஷயங்களைச் சங்கிரகித்தலே. இதைத்தவிரச் சாசனபரீக்ஷையானது தமிழ்முதலியபாஷைகளின்சரித்திரத்துக்கும் பலவிதமாய்ப் பிரயோஜனப்படுகிறது. இந்தப் பிரயோஜனத்தைப்பற்றித்தான் நான் சில சொல்லப்போகிறேன்.

தமிழ்முதலியபாஷைகளினிலக்கணங்களில் எழுத்துக்களின்வடிவைக்குறித்துச் சொல்லப்பட்டிருப்பது எல்லாருக்குந் தெரிந்தவிஷயம். இவ்விலக்கணங்களெழுதியகாலத்து எழுத்துக்கள் எவ்வாறிருந்தனவென்பதைக் கிரந்தகர்த்தாக்கள் சூசிப்பித்தார்கள். அவைகளெழுதியகாலத்துக்குப்பின் பலநூற்றாண்டுகள் சென்றுவிட்டன. இந்நூற்றாண்டுகள்தோறும் எழுத்துக்களும் மாறுபட்டுக்கொண்டேவந்துவிட்டன. இலக்கணசூத்திரங்களிற்சொல்லப்பட்ட எழுத்துவடிவங்கள் இக்காலத்து எழுத்துக்களிற் காணப்பெறா. ஆதலால் இச்சூத்திரங்களின்பொருளை யறியவேண்டுமானால், பழையசாசனங்களின் எழுத்துக்களைப்பார்த்துத்தான் தெளியவேண்டும். எகர ஒகர உயிர்களும்

* இது மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றாம்வருஷக்கூட்டத்திற் படிக்கப்பெற்றது.

*

மெய்களும் புள்ளிபெறுமென்று ஒருசூத்திரம் தொல்காப்பியத்திற் காணப்படுகிறது. இச்சூத்திரமெழுந்தவெகுகாலத்துக்குப்பின் உரைக ளெழுதப்பட்டன. உரைகாரர்கள்காலத்திலேயே சூத்திரங்கள் நன்கு விளங்கினவோவென்று ஐயுறவேண்டியிருக்கிறது. பழஞ்சாசனங்களில் இந்தவிஷயம் தெளிவாய்க் காணக்கிடைக்கின்றது. அக்காலத்தில் எ, ஏ, ஒ, ஓ என்னும் உயிர்களும் அவற்றி னுயிர்மெய்களும் ஒரே மாதிரியாய் எழுதப்பட்டன. ஆனால் எகரத்துக்கும் ஒகரத்துக்கும் மேல் ஒருபுள்ளியிடுவதனால் அவ்விரண்டுங் குறில்களென்றுவிளங்கும். இவ்வாறு புள்ளியிட்ட எகர ஒகர உயிர், உயிர்மெய்யெழுத்துக்களைப் பல பழையசாசனங்களிற் காணலாம். நன்னயபட்டு தாமெழுதிய ஆந் திரவியாகரணத்தில் பி என்னு மக்ஷரம் நாணேற்றினவிற்போலிருக்கு மென்று எழுதியிருக்க, இப்போதைய தெலுங்கு அக்ஷரத்தைப்பார்த் தால் அப்படியிருக்கவில்லை. ஆனால் அவர் எழுதியகாலத்தில் வில் வடிவமாயிருந்ததென்பது சாசனங்களால் நன்குவிளங்கும்.

இரண்டாவது:— பண்டைக்காலங்களிற் சிற்சிலபதங்களை எவ் வாறு உச்சரித்துவந்தார்களென்பதும் ஒருவாறு தெரியவருகிறது. ஈற்று ஏகாரம் ஏய் என்று உச்சரிக்கப்பட்டுவந்தது. (செந்தமிழ்த் தொகுதி ௪, பக்கம் ௩௬௬ பார்க்க.)

மூன்றாவது:— சாசனபரீக்ஷையால், தமிழிலக்கியங்களில் துர்லப மாய்க்கிடைக்கக்கூடியனவும், கிடைக்காதனவுமான பலபதங்கள் வெளி யாகின்றன. நிலத்தின்வகைகளைக்குறிக்க கரி, முதை, மற்றம், புறுய், ஓடி, வளால் என்று பலபெயர்கள் சாசனங்களிற் பிரயோகிக்கப்பட்டுள் ளன. அவைகளில், கரியென்பது வியவசாயத்துக்குக்கொண்டுவரப்ப டாதநிலத்துக்குப்பெயராம். முதையென்பது முதன்முதல் திருத்திச் சாகுபடிசெய்யப்பட்டநிலத்தின்பெயர். மற்றமென்பது ஆற்றோரத் திற் சரிவாயும் தாழ்ந்துமிருக்கிறநிலத்தின்பெயராம். இவைபோலவே மற்றவைகளும் வெவ்வேறுவிதமானநிலங்களைக்குறிக்கும்பெயர்களாம்.

நான்காவது:— தமிழ்நூல்களின்காலவரையறைசெய்யும்விஷயத் திற் சாசனபரீக்ஷை வெகு உபயோகமுள்ளது. பலநூல்களின்கால நிர்ணயம் செந்தமிழ்வாயிலாய்வெளியிட்டிருக்கிறேன். சாசனபலத் தால் எங்ஙனம் காலநிர்ணயம்செய்யக்கூடுமென்பதை அங்கே கண்டு

கொள்வது. கிரந்தங்களின்காலநிர்ணயமாத்திரமல்ல; சிலசமயங்களிற் பாட்டுடைத்தலைவன் இன்னானென்பதும் சாசனங்களாற் சுலபமாய்த் தெளியவைக்கலாம். நந்திக்கலம்பகத்திற்சொல்லப்பட்ட நந்தியும், வீரசோழியத்திற்சொல்லப்பட்ட பொன்பற்றிகாவலன், வீரசோழன்முதலியவர்களும், புறநானூற்றில்வர்ணிக்கப்பட்ட பல்யாகசாலை முதுகுடுமி, ஆய்முதலியவர்களும் இன்னின்னார் என்றும், அவர்களிருந்தகாலங்க ளின்னின்னநூற்றாண்டுகளென்றும் சாசனஆராய்ச்சி செய்தவர்களாற் சுலபமாய்ச்சொல்லக்கூடும்.

ஐந்தாவது:— மேற்கூறியவைகளேயல்லாது இதுகாறுந்தெரியாத தமிழ்நூல்களின்பெயரும், அவைகளை ஆக்கியோர்பெயர்களும் சாசனங்களில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. ஒருசாசனத்தில், பெருந்தேவனார்காலத்துக்கும்முந்திப் பாரதம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டதென்றுகூறியுள்ளது. மற்றொன்றில், இலத்தூர்நாட்டு அரும்பாக்கத்து அறநிலைவிசாகன் திரைலோக்கியமல்லனான் வத்ஸராஜன் என்பவன் பிற்பட்டகாலத்திற் பாரதத்தைத் தமிழிலாக்கினானென்று சொல்லியிருக்கிறது. பின்னுமொருசாசனத்தில் வீரைத்தலைவன் இரும்பைப் பரசமயக்கோளரி என்பவன் கன்னிவனபுராணம், பூம்புலியூர்நாடகம், அஷ்டாதசபுராணம்முதலியவைப்பாடினானென்று தெரியவருகிறது. பின்னையும் ஒருசாசனத்திற் குளக்குடையான் அருணிலையாகிய ஸ்ரீகிருஷ்ணன் மூவேந்தப்பிடவூர்வேளார்தந்தையார், திருமாற்பேற்றில்வீற்றிருக்கும் கோவிந்தப்பாடியாழ்வாருக்கு, “கோலநற்குழல்” என் றாரம்பமுடைய ஒரு பதிகம்பாடினாரென்றுசொல்லப்பட்டிருக்கிறது. அதிவீரராமபாண்டியன்தந்தை குலசேகரபாண்டியன், பூமாலையணிந்தால்வாடுமென்று வீரவெண்பாமாலையையணிந்தானென்று பலசாசனங்களிற்கூறியிருக்கிறது. இவ்வகையாக, இதுகாறுமுள்ள தமிழிலக்கியத்துளகப்படாத சிற்சில தமிழ்நூல்களின்பெயர்களும், ஆசிரியர்களின்பெயர்களும் கிடைப்பதால் அந்நூல்களைத் தேடிப்பிடிக்கவியலும்.

ஆறாவது:— சாகரம்போற் பரந்துகிடக்கும் பொருளதிகாரத்திற் காணும் பற்பலவிஷயங்களைவிளக்கச் சாசனங்கள் மிகப்பயன்படுமென்பது சாசனங்களிலும் தமிழிலக்கணங்களிலும் பழகியவர்களுக்கு நன்கு புலப்படும். தொறுக்கொளல், நிரைமீட்டல், கல்நடுதல், மறங்கூறல்,

வஞ்சினங்கூறல், வாள், குடை, நாள் முதலியவைகளின் மங்கலம் என் பனபோன்ற பலவிஷயங்கட்கு உதாரணம் சாசனங்களில் ஏராளமாய்க் கிடைக்கின்றன. அவைகளில், தொறுக்கொளல், நிரைமீட்டல், கல்நடு தல் என்பவற்றைக்குறித்துச் செந்தமிழ் 3-ஆம்தொகுதியில் முன் னரே எழுதியிருக்கிறேன். வஞ்சினத்துக்கு உதாரணமாகச் செந்தமிழ் 3-ஆம் தொகுதியிலேயே ஸ்ரீரங்கம்சாஸனங்களென்னும் தலைப்பின்கீழ் என்னண்பர் ஸ்ரீமான்-நாராயணஸாமிஐயர் எழுதியிருக்கிறார். (Refer to it by reading extracts and also the Kannada portion extracted) அரசர்கள் தங்கள்பெயர்களைத் தங்கள் உத்தியோகஸ்தர் கட்குப் பகுமானித்துக்கொடுப்பதென்னும்வழக்கம் சாசனங்களால் மிகத்தெளிவாய் அறியப்படும். நம்மாழ்வார்க்குப் பராங்குசன் என் னும்பெயர் பாண்டியவரசன் பராங்குசனுடையஸ்மரணைக்காக அளிக் கப்பட்டதாயிருக்கலாம். அதுபோல மதுரகவிகளுடையபெயர் பராந் தகபாண்டியனென்பவன்மந்திரியாகிய மதுரதரமானபாடல்களைக் கவ னம்செய்வதில்வல்லவனாய், அதனாலேயே மதுரகவியென்னும் பட்டம் பெற்ற மாறன்காரியின்பெயராயிருக்கலாம். பின்னும், ஏனாதிமோதி ரம்பெறுவது முதலானவிஷயங்களும் சாசனங்களால் விசதமாகின்றன.

ஏழாவது :— சாசனங்களாற் சிலவார்த்தைகளின் தாது, உத் பத்திமுதலியவைகளையு மறியலாம். வயல் என்னும்வார்த்தை பழையசாஸனங்களில் வயக்கல் (அதாவது வசக்கல், வசமாக்குதல்) என்றே காணப்படுகின்றது. இதுபோல மற்றும் பலவார்த்தைகளுக் கும் பொருள்செய்யலாம். இந்தவிஷயங்களெல்லாம் தமிழகராதி யெழுதுவோர்கள் முக்கியமாய்க்கவனிக்கத்தக்கன. இவைகளையெல் லாம் தீர ஆராயாது எழுதும் அகராதி குறைவுடையதாகவேயிருக்கு மென்பதிற் சந்தேகமேயில்லை. இப்போதே தமிழ்மொழிகளை இங்கி லீஷ் அக்ஷரத்திலெழுதுவதிற்காணும் பிழைகளும், இன்னம் பலவா றுனபிழைகளும் எண்ணிறந்துகிடக்கின்றன. அவைகளையெல்லாங் களையாது எழுதிமுடிப்பார்களேல், அகராதியெழுதச் செலவிட்ட பண மெல்லாம் வீணாய்முடியும்.

மேற்கூறிப்போந்தவைபோன்ற பலபயன்கள் சாசனபரீக்ஷையால் ஏற்படுகின்றதோடு இப்பரீக்ஷையால் இன்னு மநேக உபயோகங்களும் உள்ளன. அவைகளைப் பின்னொருமுறை எழுதுவேன்.

து. அ. கோபிநாதராவ், எம். ஏ.

மறையாவன.

"மறையாவன தைத்திரியமும் பௌடியமும் தலவகாரமுஞ் சாமவேதமுமாம். இனி வேதவியாதர்வரையறைப்படுத்தியகாலத்து ஓதுகின்ற நான்குவேதமுமாம்" எனக் கலித்தொகைக் கடவுள்வாழ்த்துப் பாட்டுரையில் நச்சினார்க்கினியர் எழுதியிருக்கிறார்.

ஆகவே வேதங்கள் இருவகையாகப் பிரிபட்டிருந்தனவென்று இவ்வுரையால் அறிகிறோம். அவை,

(1) இருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வம்;

(2) தைத்திரியம், பௌடியம், தலவகாரம், சாமவேதம்;

என்பனவாம்.

வடமொழியிற் பின்காட்டியபிரிவினையைப்பற்றி ஒன்றும் எழுதப்படவில்லையென்று தெரிந்தவர்கள்கூறுகின்றார்கள். என்ன ஆதாரத்தின் மேல் நச்சினார்க்கினியர் வேதங்களை இவ்விதம் பிரித்துக்காட்டினார்?

அதர்வவேதத்தைச்சார்ந்தவர்கள் ஒருவருமில்லை. பலகாலம் இருக்குவேதமும் தென்னாட்டில் வழங்கிவரவில்லை. அக்காலத்து இத்தென்னாட்டுப்பிராமணர்கள் யஜுர்வேதத்தை அல்லது சாமவேதத்தைத்தழுவியவர்கள் என்று தெரிகிறது. இவ்விஷயத்தை நச்சினார்க்கினியர்காட்டியிருக்கும் வேதங்களின் புதியபிரிவு நமக்குக் காட்டுகின்றது என்று இவ்விடத்தில் ஒருவாறுநிரூபிக்கப்படும்.

1. இருக்குவேதம் இங்குவரத் தாமதப்பட்டதற்கும், யஜுர்வேதம் விரிவாயும் விரைவாயும் பரவியதற்கும் உளவாகும் காரணங்கள் பின்கண்டபடி, "Imperial Gazetteer of India"* என்னும் மதிப்பேற்றமுள்ள நூலிற் கூறப்பட்டுள்ளன.

யஜுர்வேதத்தின் நடப்பும் நாகரிகமும் இருக்குவேதத்தின்நாட்டிற்கு மிகவும் கிழக்கிலுள்ளதேசங்களைச்சேர்ந்தவை. யஜுர்வேதத்தில் (இருக்குவேதத்திற்கூறியிருப்பதுபோல் இந்துதேசத்தின் வடமேற்கெல்லையென்றுசொல்லக்கூடும்) சிந்துநதியைப்பற்றியும் அதன்கிளை

---

* See Volume II page 227. இரண்டாவதுசம்புடம் 227-ம்பக்கத்தைப் பார்க்க.

நதிகளைப்பற்றியும் பேசப்படவில்லை. வடஇந்தியாவின் மத்தியபாக மாகிய குருக்ஷேத்ரமும் பாஞ்சாலதேசமுமே யஜுர்வேதத்தின்நாடுக ளாம். குருக்ஷேத்திரதேசத்தில்தான் பிராமணர்கள் தங்கள் மதக்கோட் பாடுகளையும் ஜனங்களின்வியவகாரவிதிகளையும் ஏற்படுத்திக்கொண் டனர். பிராமணர்களுக்கு மற்றநாடுகளைவிட அக்காலத்தில் இந்நாடு மேலானநாடாகமதிக்கப்பட்டதென்றுகாட்ட இதற்குப் பிர்மாவர்த்தம் என்றபெயர் இடப்பட்டது. இவ்விடத்தில்தான் யஜுர்வேதிகள் அநேக சாகைக்காரர்களாகப்பிரிந்து இத்தேசத்தின் மற்றப்பாகங்களுக்குச் சென்றார்கள்.*

ஸிந்துநதிக்கரையினின்று ஜனங்கள் இங்குவந்துசேரத் தாமதமா கும் என்பது சித்தம். ஆகையினாலேயே இருக்குவேதிகள் ஆதியில் தென்னாட்டிற் பலர் இருந்திருக்க இடமில்லை.

II. இவ்விஷயத்தை நச்சினார்க்கினியரின்உரை எவ்விதம்காட்டு கின்றது என்று இப்பொழுது ஆராயலாம்.

வேதங்கள்நான்கு:—அவை;—தைத்திரியம்; பௌடியம்; தலவ காரம்; சாமவேதம் என்பனவாம். இவற்றுள் முன்னிரண்டும் யஜுர் வேதத்தையும் பின்னிரண்டும் சாமவேதத்தையும் குறிக்கின்றன.

(i) "தைத்திரியம்" என்பது "கிருஷ்ணயஜுர்வேதசாகை". வைசம் பாயனர் தமதுசீடனாயாஜ்ஞ்யவல்கியரிடம்சினந்து அவரைப்பார்த் துத் தாம்கற்றுக்கொடுத்தயஜுர்வேதத்தைக் கக்கிவிடு என்றுகூறச் சிஷ்யர் அவ்விதமேசெய்தார். அருகிலிருந்த சிலசிஷ்யர்கள் தேஜோ ரூபமாய்க்கக்கிக் கீழ்விழுந்திருப்பதை, "தித்திரி" அல்லது "கவுதாரி"ப் பக்ஷிவேஷங்கொண்டுகுடிக்க அவர்கள் தைத்திரியவேதிகள் ஆனார்க ளாம். வாயினின்றுகக்கியது கருநிறமாயிருக்குமாதலின் இவ்வேதத் திற்குக் கிருஷ்ணயஜுர்வேதமென்றுபெயராம்.

---

* பின் இரண்டுமொழிகள் இங்குக் கவனிக்கத்தக்கவை.

(1) வாத்திமஜாதி=மாத்யமாள்=இந்ததேசத்தின்மத்யம(நடு)பாகத்தி லிருந்துவந்தவர்கள்.

(2) வடமஜாதி=வடதேசத்திலிருந்துவந்தவர்கள்.

இவர்களுக்குள் முற்பட்டுவந்து குடியேறினவர்கள் சோழதேசத்துவடமர்க ளென்றும், பிற்பட்டுவந்தவர்கள் வடதேசத்து வடமர்களென்றும் கூறப்படுகிறார் கள்.

(ii) "பௌடியம்" அல்லது "பௌழியம்" அல்லது "பௌஷ்யம்" என்பது "சுக்லயஜுர்வேதம்" ஆகும். பௌஷ்யம் என்பது பௌஷ்ணம் என்பதன்சிதைவென்றுதோன்றுகிறது. பௌஷ்ணம் என்பது பூஷன்சம்பந்தப்பட்டவேதம். அதாவது: சூரியதேவதையாற்கற்பிக்கப்பட்டவேதம். யாஜ்ஞ்யவல்கியர் வைசம்பாயனாதுவேதத்தைக்கக்கினதும் சூரியதேவதையை உபாசித்து அந்தத்தேவதையாகிய பூஷனிடம் புதுவேதம் ஒன்றைக் கற்றுக்கொண்டார். இதுதான் சுக்லயஜுர் வேதம் அல்லது "பௌஷ்ணம்" (பூஷனதுவேதம்) அல்லது "பௌஷ்யம்". ஆகவே தைத்திரியமும் பௌஷ்யமும் யஜுர்வேதத்தைக்குறிக்கும்.

(iii) "தலவகாரம்" என்பதற்குப் பொதுவாகச் சாமவேதமென்று பொருள்கூறலாம். "தலவம்" என்பது சங்கீதம், பாட்டு, இசை என்று பொருள்படும். "தலவகாரம்" என்பதற்குப் பாடுவதற்கு ஏற்பட்டது என்று பொருள்கூறுவர்.

[தலவகாரம் என்பது, சாமவேதத்தைச்சார்ந்த, இந்நாளில் "கேந" என்றபெயராற்கூறப்படும் ஒரு உபநிஷதத்திற்கு ஆதிப்பெயர். இவ்விதமே சாந்தோக்யமும், தலவகாரத்தின்பொருளைக்கொண்டு சாமவேதத்தின் வேறொரு உபநிஷதத்திற்குப்பெயராம்.]

'சந்தோகன்' என்றபதத்தின்பொருள் "சாமவேதஅத்யயனஞ் செய்தவன்" என்று மனுஸ்மிருதியிற் கூறியிருக்கிறது.* இவ்விடத்திற் கவனிக்கவேண்டியது தலவகாரத்திற்கும் சந்தோகத்திற்கும் பொருள் ஒற்றுமையும் விஷயஒற்றுமையும் ஆம்.

III. இப்பிரிவினையைத் தமிழ்நூலாசிரியர்களில் யாராயினும் ஒப்புக்கொண்டிருக்கிறார்களாவெனின், எனக்குத்தெரிந்தமட்டில், திருமங்கையாழ்வார் ஒருவரே இப்பிரிவினையைக் காட்டியிருக்கிறார். ஆழ்வார்களுள், பெரியாழ்வார் ஒருவரே இருக்குவேதத்தையும், யஜுர்வேதத்தையும் குறித்திருக்கிறார். அவர்திருமொழி ஐந்தாம்பத்து முதல்திருமொழி ஆறும்பாட்டில்,

"இருக்கொசுச்சாமவேதநாண்மலர்கொண்டுன்பாதம்
நண்ணுநாள்" (பெரியாழ்வார்திருமொழி 5, 1, 6.)

---

* மநுஸ்மிருதி மூன்றாவது அத்யாயம் 145-வதுசுலோகத்தைப்பார்க்க.

இருக்குவேதத்தின்பெயரும் யஜுர்வேதத்தின்பெயரும் வந்திருக்கின்றன. நாலாயிரதிவ்யப்ரபந்தத்தில் வேறு ஒருஇடத்திலும் "யஜுர்" என்றபதம் வரவில்லை. இருக்கு என்றபதம் பலவிடங்களில் வந்திருக்கின்றது.

1. "இருக்கிலங்குதிருமொழிவாய்" பெ. தி. 6, 6, 8.
2. "இருக்கார்மொழியால்" திருவிருத்தம், 64.
3. "மேவித்தொழுதுய்மினீர்கள்வேதப்புனிதவிருக்கை
நாவிற்கொண்டு" திருவாய்மொழி 5, 2, 7.

இவைபோன்ற இடங்களில் "இருக்கு" என்றபதத்திற்குப் பொதுவாக "வேதவாக்யம்"* என்று பொருள்கொள்வது தகுதி.

திருமங்கையாழ்வார் பல இடங்களில் வேதங்கள் நான்கு என்று கூறியிருக்கிறார். உதாரணமாகப் பின்காட்டியவற்றைப்பார்க்க.

"பன்னுகலைநால்வேதப்பொருளையெல்லாம்" (பெ. தி. 7, 8, 2.)
"மன்னுநான்மறைமாமுனிபெற்றமைந்தனை" (பெ. தி. 5, 8, 6.)
"......................நால்வேதம்
கண்டானைகண்ணபுரத்துறையம்மானே" (பெ. தி. 8, 10, 1.)
"மேவுநான்மறைவாணர்ஐவகைவேள்விஆறங்கம்வல்லவர்" (பெ.தி 9,10,9.)
"அங்கமாறைந்துவேள்விநால்வேதம் .....எரிமூன்றும்" (பெ. தி. 9, 1, 1.)
"வேதநான்கைந்துவேள்வியங்கமாறிசையேழ்" (பெ. தி. 6, 7, 7.)

இவ்வாறு வேதம்நான்கு என்று எழுதிய இவர் வேதவியாசர் வரையறைப்படுத்தியவேதங்களை ஒப்புக்கொண்டு எழுதியதாக விளங்கவில்லை.

"சந்தோகன்பௌழியனைந்தழலோம்புதைத்திரியன்சாமவேதி"(பெ.தி.5,5,9.)
"சந்தோகா! பௌழியா! தைத்திரியா! சாமவேதியனே!† நெடுமாலே!"
(பெ. தி. 7, 7, 2.)

என இவ்வாறுகூறி இத் தென்னாட்டில்வழங்கிவந்த யஜுர்வேதத்தின் சாகைகளையும், சாமவேதத்தின்சாகைகளையுமே குறித்திருக்கின்றனர். இவ்வாழ்வாருக்குப்பிற்காலத்தவரான நச்சினார்க்கினியர்காலத்தினும்

---

* திருச்சந்தவிருத்தம் 103-ஆம்பாட்டிலுள்ள "இருக்கலந்தவேதநீதி" என்பதிலும் 109-ஆம்பாட்டிலுள்ள "இருக்குவாய்முனிக்கணங்கள்" என்பதிலும் உள்ள இருக்கு என்னும் பதத்திற்குச் சம்பிரதாயவியாக்கியானத்தின்படி இருக்குவேதம் என்று பொருள்கூறியிருப்பதாகத் தெரியவருகிறது.

† "சாமவேதியன்" என்றபதத்திற்கு வாமன் சிவராம ஆப்தே எழுதியிருக்கும் வடமொழி ஆங்கிலஅகராதியில் "சந்தோகபுரோகிதன்" என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது.

இருக்குவேதம் இங்கு அதிகமாகநடையாடாமல் வடதேசத்திலேயே வழங்கிவந்தது என இவ்வுரையாசிரியர்கலித்தொகையுரையால்விளங்குகிறது. "தலவகாரம்" என்பதற்கும் "சந்தோகம்" என்பதற்கும் அதிகபேதமில்லையென்று முன் காட்டியிருக்கிறேன். "சந்தோகம்" என்றபதம் திருமங்கையாழ்வார்க்கு மகிழ்ச்சியைக்கொடுத்தமொழிகளில் ஒன்றென்றுநினைக்கலாம். ஏனெனில்,

"சந்தோகாதலைவாதாமரைக்கண்ணனே
அந்தோஅடியேற்கருளாய்உன்னருளே"

என்று பெரியதிருமொழியை முடித்திருக்கிறார்.

சிறந்த வியாக்கியானகாரரான பெரியவாச்சான்பிள்ளை மேற்கண்ட வேதப்பிரிவுகளைப்பற்றி ஒன்றுமெழுதாமல் விட்டுவிட்டார்.

ஸ்ரீவைஷ்ணவகிரந்தமுத்திராபகஸ்பையாரால் அச்சிடப்பட்டிருக்கும் பெரியதிருமொழிப்பிரதிபதஉரையில் "பௌழியம்" என்ற மொழிக்கு "பிரஹதாரண்யகஉபநிஷத்"* என்பது பொருளாகக்காட்டப்பட்டிருக்கிறது. இவ்வுரை யாரால் எழுதப்பட்டதோ? என்ன ஆதாரத்தைக்கொண்டு மேற்கண்டவிதம் பொருள்கூறப்பட்டதோ? யானறியேன். ஆயினும் பொருள் பிழையானதென்றுகூற இடமில்லை. "பிரகதாரண்யக உபநிஷத்" சுக்லயஜுர்வேதஉபநிஷத் ஆகையால், நான் மேலேகூறியிருப்பதை இது வற்புறுத்துகிறது.

IV. சாமவேதம் இதைப்பற்றி ஒன்றும் எழுதவேண்டியதில்லை. ஆகவே தலவகாரமும் சாமவேதமும் சாமவேதத்தின் இருசாகைகளைக் குறிக்கலாம்.

எஸ். இராதாகிருஷ்ணையர்,
B. A., F. M. U.

---

* மேற்கண்டபடி எழுதிமுடித்து மதுரைச் செந்தமிழுக்கு இதனையனுப்ப உத்தேசித்திருக்குஞ் சமயத்தில் நான் யாழ்ப்பாண அகராதியைப் பார்க்கநேரிட்டது. அவ்வகராதியில் யாவருக்குந்தெரிந்தபடி ஆதாரத்தைக் கூறாமல் 'பௌடியம்' என்பதற்கு "முதல்வேதம்" என்று பொருள் எழுதப் பட்டிருக்கிறது. அப்படியாயின், பௌடியம், தைத்திரியம், சாமவேதம் என்பவை முறையே இருக்குவேதத்தையும் யஜுர்வேதத்தையும் சாமவேதத்தையும் குறித்து, வியவகாரத்தை முழுதும் நீக்கும். இப்பொருளை பெரியவாச்சான்பிள்ளையும் பிரதிபத உரையாசிரியரும் அறியாதிருந்தமைக்குக் காரணமென்ன? "மன்னப்படும் மறைவாணனை" மூன்றுவேதங்களின் பெயர்களாற்கூப்பிட்டுப் பிறகு குறிப்பாகச் "சந்தோகா"வென்றும் கூவுவது நியாயமே; நாராயணனது ஆயிரநாமங்களுள், 'சாமகாயனன்' 'சாமகன்' "சாமன்" முதலிய சாமவேதசம்பந்தமுள்ளபெயர்கள் விசேஷமாக எடுத்தோதப்பெற்றிருப்பதால்.

ஸ்ரீ:

மூன்றுகக்ஷபுடங்கள்.

1-வது நவக்கிரககக்ஷபுடம்.
2-வது வைத்தியகக்ஷபுடம்.
3-வது புவனகக்ஷபுடம்.

இப்பரதகண்டத்தில் அரசர்கள் முன்னாளில் நாட்டின்சுகத்திற்கும் தமதுசுகவாழ்விற்கும் இம்மூன்று நூல்களையும் முக்கியஸாதனங்களாகவைத்துக்கொண்டு மணி மந்திர ஔஷதங்களைக் காப்பாற்றிவந்தனர். காலமழையும் ஆயுளும் சுகவாழ்வும் நன்குநிலைபெற்றோங்கின.

2. பிறகு காலநிலைமாறவே கலிநாளில் மூன்றுகுணங்களுள், பிற்றையவிரண்டும் பிரபலமாகி முதற்குணமாஞ் சத்துவம் தாழவே மணி மந்திர ஔஷதங்கள் போலியாய்விட்டன. விடவே காலமழையுஞ் சுகவாழ்வுங் கல்வியு மிறங்குபடியாய்நடைபெறுகின்றன.

3. இம்மூன்று நூல்களும் வடமொழிரூபமாயுள்ளன. பிற்காலத்தார் தமிழிற்பெயர்த்துள்ளார். இவைகள் எங்குங்கிடைப்பதில்லை. வடமொழிப் புவனைகக்ஷபுடம் மைசூரிலாகாவிலுள்ள சிவகங்கையில் ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள்மடத்திலுள்ளது. மற்றைய இரண்டுநூல்களும் சிதம்பரத்தில், தீக்ஷதர்களிடம் இருக்கின்றன. என்னிடம் புவனைகக்ஷபுடம் இருக்கின்றது. இது தமிழ்க்கவிரூபமாய் 50-கவிகளாயமைந்துள்ளது. மாதிரிக்காக மூன்றுகவிகள்வரைந்துள்ளேன்.

4. இந்நூல்கள் மகான்களால் பரமரகஸியமாகக்கையாளப்பட்டுவந்தமையால் ராஜகிருகங்களில்மட்டும் கோப்பியமாகவைக்கப்பட்டுவந்தன. காலம் மாறவே இந்நூல்கள் மலினகதியையடைந்துகொண்டுவருகின்றன.

5. 1. மணியென்பது மகான்களின்கண்மணியின்பார்வை. 2. மந்திரம் என்பது திருமால், சிவபிரான், நரசிங்கன், கணபதி, குமரன், அநுமான், கருடன்முதலியமூர்த்திகளின் உபாஸனைக் கின்றியமையாத அக்ஷரரூபமான சொற்றொடர், சுலோகம் முதலியனவாம்; இம்மந்திரங்கள் அங்கநியாஸம், கரநியாஸம், தியானசுலோகம், கவசம், இருதயம், மாலாமந்திரங்களோடு தக்க ஒருவரால், தொட்டுக்காட்டினலன்றிப் பயன்படா. 3. ஔஷதம், மூலிகைகளுக்குக் காப்புக்கட்டிச்

சாபவிமோசனஞ்செய்து மந்திரங்கூறிக் காலமும் நேரமும்பார்த்துக் கிரகித்துவந்து தைலம், லேகியம், பஸ்மம் முதலியவைகளாகச்செய்யப் படுவது. (கருவூராரது அஷ்டகருமமூலிகைநூலைப் பார்க்க.)

புவனகக்ஷபுடம் முதற்கவி.

"திரித்தொருவட்டத்தினுள்ளேயொருவட்டஞ்சேர்த்தியதில்
தரித்திடுவாயுவின்வீசமுஞ்சத்தியுந்தானெழுதிக்
கருத்தினுளன்னைபுவனையையேதகக்கண்டிருக்கில்
மிருத்துமுதலவையாவேசமாகிவிளம்பிடுமே"

26-ஆம் கவி.

"இருக்குமுதலிவைக்கெட்டாவுருவொன்றிதுதனிலே
குருக்குங்குடிலையுநாதமும்விந்துவுங்கூறும்விந்து
தரிக்குங்கலைகள்புவனைகள்தத்துவஞ்சாற்றுவதே
துரைக்கும்பொழுதுபுவனைவடிவதென்றோதுவதே"

50-வது கவி.

"தெரிக்கும்புவனைகலைஞானதீபச்செழும்பொருளை
விரிக்கும்பனுவலினேரெழுத்தேனும்விதிமுறையால்
தரிக்கும்புலனுடையாரல்லரோவித்தரணியெல்லாம்
பரிக்கும்புரவலராயின்பவீடுபெரிப்பவரே"

குறிப்பு: மானிடவுருவென்பது பிண்டம். இப்புவிமுதலியவை சேர்ந்த கோளவடிவமே அண்டம். அண்டத்தின் நியாயமே பிண்டத்திலுமுள்ளது. நவக்கிரகங்களும் வரைகளும், பதினான்குலகங்களும் புறத்திலுள்ளனபோல மனிதசரீரத்திலு மமைந்துள்ளன. வைத்திய வகையாய் எல்லாமூலிகைகளும் நவக்கிரக அம்சமாக அமைந்துள்ளன. நவக்கிரகசாந்தியும் அவைகளின்சார்பாய் ஔஷதங்களும் அமைந்திருக்கின்றன. இதனால் நவக்கிரககக்ஷபுடம் வைத்தியகக்ஷ புடங்களின்பயனை அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்,

தி. வேங்கடராம ஐயங்கார்,

தமிழ்ப்பண்டிதர்.

தமிழ்ச்சங்கத்தாற் செய்யத்தகுவது.

இவ்வருடத்துடன் எல்லாம்வல்ல இறைவனருளால் இச்சங்கத்தின் பதின்மூன்றுமாண்டு நிறைகின்றது. தற்போது இச்சங்கம் வாலப்பிராயம்நீங்கி யௌவனப்பிராயத்தையடையவில்லையெனினும் இச்சிறுவயதிற்றானே இச்சங்கத்தால்விளைந்தநன்மை இணைத்தென்று வரையறுத்துக்கூறுதல் சாத்தியப்படத்தக்கதன்று. சின்னாண்முன், தமிழ்ப்பாஷையின்நிலைமை எவ்விதமிருந்ததெனச் சற்று ஆராய்வோம். நமது ஸர்வகலாசாலைகளினின்று கற்று வெளிப்போந்தமாணவர்கள்பலர் தமிழ்கற்றவர்களாய்க்கருதப்பட்டிருந்தார்கள். அப்பொழுது தமிழும் ஒரு உபபாஷையா யங்கீகரிக்கப்பட்டுவந்தது. அப்பாஷையை உபபாஷையாய் எடுத்துக்கொண்டவர்கள் அதிற்றேறாவிடிற் பூரணவித்தியாபட்டத்தையும் பெறமுடியாதவர்களா யிருந்தனர். அப்போதைய ஸர்வகலாசாலைமாணவர்களைப்பற்றி ஒருவர் பின்வருமாறு அபிப்பிராயங்கொடுத்திருக்கிறார்:—

"நமது ஸர்வகலாசாலைகளிற்றேர்ச்சிபெற்ற (தமிழறிந்த) மாணவர்கள் இப்பாஷையிற் புதியநூல்களை யியற்றினாரில்லை. இது சர்வசாதாரணமானவிஷயமாயினும் இந்நிந்தைக்குச் சிலர்மாத்திரம் இலக்காகவில்லை. அஃது அவர்களின்அபாரசக்தியின்பயனேயன்றிச் சர்வகலாசாலைகளில் அவர்கள்கற்ற கல்வியின்பயனன்று. கலாசாலைகளில் மாணவர்களால் தமிழ் ஒழுங்காய்ப்படிக்கப்படவில்லை. இலக்கணமுற்றும் உபேக்ஷைசெய்யப்பட்டன. பரீக்ஷைகளிற்றேறுதற்குவேண்டிய சிலசெய்யுட்களையும் அவற்றின்பொருள்களையும் மனனம்செய்து அவற்றிற் றேறிவிடுகிறார்கள். அவர்கள் படிக்குங்காலத்திற் பலபாகம் எடுத்துக்கொண்டசாஸ்திரத்தைப்படிப்பதிலும், சிலபாகம் ஆங்கிலங்கற்பதிலும் செலவிடப்படுகின்றன. இவ்விதப்பயிற்சியின்பயனால், சர்வகலாசாலைகளிற் பிரதமவித்தியாபட்டம்பெற்றமாணவர்கள் நூலாசிரியராய் முற்பட யோக்கியதையற்றவராயினர். இவர்கள்கதியே இவ்வாறாக இவர்கள்தேறியபரீக்ஷையினும் கீழ்ப்பட்டபரீக்ஷைகளிற்றேறியமாணவர்களைப்பற்றிச்சொல்லுதல் மிகையாகும்"

இதனால், சர்வகலாசாலைகளிற்கற்பிக்கப்பட்டுவந்த தமிழ்க்கல்வி ஒருகல்வியல்லவென்பதை யூகித்தற்கிடனாகின்றது.

இதுநிற்க, தற்போது சர்வகலாசாலைப்பரீக்ஷைகளினின்று தமிழ்முதலியதேசபாஷைகள் முழுதும் நீக்கிவிடப்பட்டன. இதோடு நமதுபாஷைகளுக்கு ஏகதேசமிருந்தசெல்வாக்கும் இற்றுப்போய்விட்டது. இஃதிவ்வாறுநேருமென்றறிந்தோ? அல்லது எக்காரணம் பற்றியோ? எல்லாம்வல்ல இறைவனருள் தமிழபிமானிகள்சிலர்மனத்துட்புக்கு இத்தகையசங்கமொன்றைத்தாபிக்கவேண்டுமெனத்தூண்டினதுபோலும். இப்பெரும்புண்ணியமாகிய தமிழ்ச்சங்கத்தைநிறுவிய மகானாகிய ஸ்ரீமான் பாண்டித்துரைச்சாமித்தேவரவர்களும், அப்புண்ணியமிகுதிப்பாட்டாற் சின்னாண்முன்னர்ச் சுவர்க்கவின்பத்தைத்துய்ப்பான்சென்றனர்போலும். அஃதவ்வாறாயினும் 'செயற்கரியசெய்வார் பெரியர்' என்னும் திருக்குறட்கு இவர் இலக்காயினரென்பது தேற்றமாம்.

நிற்க, இச்சங்கம் இச்சில்லாண்டிற்றானே எத்துணைப் பெருங்காரியங்களைமுடித்திருக்கின்றதென்பது 'செந்தமிழ்ப்' பத்திரிகையை முறையாய்ப்படிப்போராலும், அச்சங்கத்தான்முததிரிக்கப்பட்ட 'திருநூற்றந்தாதி', 'வளையாபதிச்செய்யுட்கள்', 'நேமிநாதம்', 'அகப்பொருள் விளக்கம்', 'ஐந்திணையைம்பதுரை', 'திணைமாலைநூற்றைம்பதுரை', 'பன்னிருபாட்டியல்' முதலியநூல்களாலும் இனிதறியக்கிடக்கின்றது. ஆனால் இச்சங்கத்தின் அருமைபெருமைகளையும் இச்சங்கத்தாலாய பயன்களையும்பற்றி எடுத்துச்சொல்ல நாம் இங்கு முற்படவில்லை.

பத்திரிகைபிரசுரித்தலில் இதுகாறும் எமது அனுபோகத்தில்வந்த இரண்டொருவிஷயங்களைமாத்திரம் எடுத்துச்சொல்லிமுடிக்கின்றோம். பொதுவாய்ப் பத்திரிகாசிரியர்கள் உலகிலுள்ள சகலவிடயங்களையும் தெரிந்துகொள்ளவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இது தேசபாஷைகளிற் பத்திரிகைபிரசுரஞ்செய்வோர்க்கும் பொருந்தும்.

அவ்வாறு தேசபாஷைகளிற் பத்திரிகைபிரசுரிப்போருக்குச் சாத்தியப்படாதவிஷய மொன்றுளது. அது இங்கு வேண்டற்பாலதாய தமிழ்க்குமாத்திரம் எடுத்துக்கொள்ளப்படுகிறது. அஃதியாதெனின்,

தமிழ்ப்பாஷையிற் பத்திரிகைபிரசுரிப்போர்க்குத் தமிழிற் சிலபகுதிக ளில் அபரிமிதமானவார்த்தைகள் அமைந்தும், மேனாட்டுப்பாஷைகளி லுள்ள சொற்களைத் தமிழில்மொழிபெயர்க்கும்பகுதியில் தக்கவார்த் தைகள் அமையாதிருத்தலால் அளவில்லாததுன்பம் உண்டாகின்ற தென்பதாம். அது ஆங்கிலப்பத்திரிகைகளுட்பிரசுரமாகும் 'ராய்ட் டர்' தந்திகளைமொழிபெயர்ப்பார்க்கு இனிதுபுலப்படுமென்க. நிற்க தமிழில், பிரகிருதிசாஸ்திரம் (Physics) ரஸாயனசாஸ்திரம் (Chemistry) கணிதசாஸ்திரம் (Mathematics) முதலியசாஸ்திரங்களைச் சில பாகம் மொழிபெயர்க்கமுற்படும் ஆசிரியர்க்கும் இஃதொக்கும். ஆக லான் இவைகட்குத் தமிழிற் பரிபாஷையை ஏற்படுத்தவேண்டுவது இன்றியமையாததாகும். இவ்விஷயமாய் நம்பத்திரிகையிற் சிலமுறை குறிப்பிட்டிருக்கிறோம்.

பரிபாஷையென்பது, அவ்வச்சாஸ்திரங்களிற்சொல்லப்பட்ட சில விசேஷக்கருத்துக்களைவெளியிடப்பிரயோகிக்கப்படும் சொற்கள். இத் தகையபரிபாஷை நம்சாஸ்திரங்களிலும் மேனாட்டார்விருத்திசெய் திருக்கும் மேற்கூறிய பிரகிருதிமுதலியசாஸ்திரங்களிலும் உண்டு. இந்தப் பரிபாஷைக்காக ஏற்பட்டஅகராதிகள் ஐரோப்பாகண்டத்துப் பாஷைகளிலெல்லாங் காணப்படுகின்றன. அவ்வகராதிகளிற்காணப் படும் அநேகம்பதங்களுக்குப் பிரதிபதங்கள் தமிழையுள்ளிட்ட நம் இந்தியபாஷைகளி லில்லை. நம்நாடு விசேடமாய் விருத்தியடையவேண்டு மாயின் மேனாட்டாரால் அளவற்றபணத்தையும் சிரமத்தையும்செல விட்டு விருத்திசெய்யப்பட்ட இச்சாஸ்திரங்களைத் தமிழில் எழுதியே தீரவேண்டும். அப்படியெழுதும்விஷயத்தில் இப்பொழுது இது அவசர மில்லை. அவைகள் தேவையிருக்கும்பொழுது பார்த்துக்கொள்ளலாம் என்றிருத்தல்கூடாது. ஏன்எனின் உலகத்தில் நாகரிகம்படைத்ததேசங் களிலெல்லாம் பிரதமக்கல்வி கட்டாயப்படுத்தப்பட்டிருப்பதுபோல் நம்தேசத்திலும் பிரதமக்கல்வியானது கட்டாயப்படிப்பாக ஏற்பட வேண்டுமென்று தற்காலம் ஸ்ரீமான் கோகலே அவர்கள் கொண்டுவந்த கல்விமசோதா (Education Bill) சட்டமாகாவிடினும் கூடியவிரைவில் நமது காருண்யகவர்ண்மெண்டாரால் அவ்விதச்சட்டத்தையுண்டாக் கிப் பிரதமக்கல்வியானது கட்டாயப்படுத்தப்படுங்கால் அவசியம்வேண் டற்பாலதாம். மேனாடுகளில் இலக்கணஇலக்கியப்பயிற்சியபிவிருத்திக்

கென்றே சிலசங்கங்களும் (Academies of literature) சாஸ்திரப் பயிற்சிக்கென்றே சிலசங்கங்களும் (Academies of Science) ஏற்பட்டு அவ்வத்துறைகளில் மிக்கமுயற்சியெடுத்தல்போல இத்தமிழ்ப் பாஷைக்கு ஏற்பட்டிருக்கும் இச்சங்கத்தாரும் மனத்தைப்பூரணமாகச் செலுத்தி ஐரோப்பாகண்டத்து அகராதிகளிற்காணப்படும்பதங்களுக்குப் பிரதிபதங்களைத் தமிழகராதியில் அமைக்கவேண்டுமென்று தமிழகராதிசபையார்க்குச்சிபாரிசுசெய்யவேண்டுமென்பதெமதுகோரிக்கை.

நிற்க, நமதுசங்கம் கவனிக்கவேண்டியவிஷயம் மற்றொன்றுண்டு. நாம் சின்னாண்முன்னர்ச் சென்னைக்குச்சென்றிருந்தபோது . ஆந்திர வகுப்பைச்சேர்ந்தவர்கள் ஒரு ஸகலவித்தியாகோசம் (Encyclopaedia) ஒன்றை யியற்றியிருப்பதாய்க் கேள்வியுற்றேன். அவ்விதகோசம் ஒன்று தமிழிலும் இயற்றப்பட்டிருக்குமானால், தமிழ் படித்த ஒவ்வொருவருக்கும் சிறந்தகருவியாகும். அவ்வாறு இயற்றுதற்கு வேறு பாஷைகளில் இயற்றப்பட்டிருக்கும் கோசங்களை மொழிபெயர்க்கலாமெனின், பொருட்செலவு அதிகமாதலானும், அந்தக்கோசங்கள் எப்பொழுதெல்லாம் மாற்றப்படுகின்றனவோ அப்பொழுதெல்லாம் நாமும் மாற்றவேண்டுமாதலானும் அது இயலாதகாரியமாம். ஆதலால் அவ்வாறு இயற்றக்கருதாது பலசாஸ்திரங்களினும் விற்பன்னர்களாயிருக்கும் நம் அறிவாளிகளைக்கொண்டு தனித்தனி எழுதுவித்து ஒரு கோசமாக்குவதே மேன்மைபயக்கும். ஆகவே மேற்குறிப்பிட்ட இரண்டு விஷயங்களையும் இச்சங்கத்தார் விரைவிற்கவனித்துப் பயனுக்குக் கொண்டுவரவேண்டுமென்று திருவருளைப்பிரார்த்திக்கின்றோம்.

எஸ். இராமநாதன்,
வைசியமித்திரன்பத்திராதிபர்,
தேவகோட்டை.

சிவரகசிய ஆராய்ச்சி

"திருமருவுகும்பகோணத்தில்வாழுஞ்
செல்வமிகுபலர்சனங்கள்சிவன்பாலன்பர்
பொருவில்சிவரகசியபுராணமாகும்
பொருந்தும்வடமொழிதமிழாற்புனைவாயென்னத்
தருமமிகுதவவணையாஞ்சைவன்தியாகர்
சந்நிதியில்வரிசைபெறுந்தலைமைபூண்டோ
னிருமைநல்காநூர்ப்பிறந்தோனாரூரன்சே
யிசைகொளொப்பிலாமணிதானிசைத்தவாறே"

"மன்னர்புகழ்சரபோசிமகாராசராசன்
மாநிலங்காத்திடுநாளிற்றஞ்சைமாநகரிற்
றுன்னுமேவிளம்பியுற்றமகரமதியைந்திற்
சோதிசிவரகசியமொப்பிலாமணிசொற்றமிழை
யிந்நிலத்தினரங்கேறச்செய்தனர்பொன்மாறை
யெழில்சேருந்தீராதவினைதீர்த்தான்பாகைப்
புன்னைவனநாதனிவர்சைவநெறிவளர்க்கும்
பூபாலரவனியெங்கும்புகழினிதோங்கிடவே"

என்னுந் திருவிருத்தங்கள், தமிழ்ச்சிவரகசியத்தின் மூன்றும் அம்சத்துப் பாயிரச்செய்யுட்களாம். மதுரைத்தமிழ்ச்சங்கவித்வான் ஸ்ரீமத்-சே. ரா. அருணாசலக்கவிராயரவர்களால், சென்ற ஜெயவருடம் அச்சிடப்பட்ட இச் சிவரகசியத்தில், கவிராயரவர்கள், தமதுமுகவுரையில் இவ்வாசிரியரதுவரலாற்றையாவது, நூலியற்றியகாலம்முதலியவற்றையாவதுகூறாது பொதுப்பட "இதை ஆக்கியோர் சிவானுபூதிச்செல்வராய்த் திருவாரூரிலெழுந்தருளியிருந்த ஸ்ரீ ஒப்பிலாமணிதேசிகரென்றறிக. இப்பெருந்திருவாளர் ௫௦௯௦-பாடலிலமைத்த சிவரகசியப்பெருநூல் இரண்டுகாண்டங்களாகவகுக்கப்பட்டுத் திரியாங்கிசை என்று பிரசித்தியடைந்திருக்கின்றது. இந்தநூல், தஞ்சையில் ஸ்ரீ சரபோஜி மஹாராஜாஅவர்களது திவ்யசமுகத்தில் அரங்கேற்றப்பட்டது" என்று கூறிப்போந்தனரேயன்றி, மற்றொன்றுங்கூறாதுபோந்தனர்.

இந்நூலாசிரியர், மூலாதாரக்ஷேத்திரமும், ஜனனான்முக்திக்ஷேத்திரமுமானதும் 'திருவாரூர்ப்பிறந்தார்கள் எல்லார்க்குமடியேன்' என்று ஆலாலசுந்தரப்பெருமான் றிருவாய்மலர்ந்தருளியதுமான நிறை செல்வத் திருவாரூரின்கண்ணே அவதரித்தவர். கமலாலயக்ஷேத்திரத்தேபிறந்தவராயினும், இவருக்கு இங்கருக்கணித்தான புதுப்பத்தூ ரென்னுங்கிராமமே யுரியதென்பது, இவர், சுந்தராசலமென்னும் திருநல்லூர்த்தலபுராணத்துச் சாற்றுக்கவியின்கீழ் 'இதுசொன்னான் புதுப்பத்தூர்த் தவவணைகோத்திரத்தான் ஒப்பிலாமணியென்றறிக' என்று எழுதுவதுகொண்டு அறியப்படும். அஃதன்றியும் இவர்பரம்பரையினர் இன்றும் அவ்வூரில் வசித்துவருதலும் போதியசான்றாம்.

இவர் இலக்கணவிளக்கம்முதலியநூல்களியற்றிய வைத்தியநாத தேசிகர்பக்கல் கல்விபயின்றாரென்பது, இவர்பாடிய *கும்பகோணப் புராணத்துள்ள பின்வரும் ஆசிரியவணக்கச்செய்யுளான் இனிதுவிளங்கும். அது வருமாறு:—

"அவமொழித்தென்னுளத்தமிழ்தமூறுதீஞ்
சுவையெனத்தமிழ்வளஞ்சுரந்துநல்குமே
தவமெனக்கயிலையிலிருந்ததேசிகன்
றவவணைவயித்தியநாதன்றாள்களே" என்பதாம்.

மற்றொருக்கால் தம் ஆசிரியர்பெருமையைக்கூறநினைந்து,

"பொன்னெடுஞ்சடிலத்தெம்பிரான்நல்லூர்ப்
புராணமாக்கதைசெழுந்தமிழாற்
கன்னலுந்தேனுமமுதமுமதூக்
கனியும்போற்கட்டுரைசெய்தான்
பன்னுமெய்ப்புகழான் றவவணைமுதல்வன்
பாரெலாம்வணங்குதென்கமலை
மன்னவன்கல்விக்கடலெனச்செழித்த
வயித்தியநாததேசிகனே" என்றும்,

"தவிப்பாற்குறுதுணைவன்மீகநாதன்றனயனந்தாப்
புவிப்பாற்புலவன்வயித்தியநாதன்புகன்றசெஞ்சொற்
கவிப்பாகந்தேவர்க்கவிப்பாகம்போலின்பங்காட்டுங்கற்றோர்
செவிப்பாலுள்ளேசென்றுசித்தத்தினினின்றுதித்திக்குமே" என்றும்,

---

* கும்பகோணத்தலத்துக்குப் புராணம்பாடின அகோரமாதவன், ஒப்பிலாமணிதேசிகர், மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையென்னு மூவருள், ஒப்பிலாமணி தேசிகரியற்றியது சிவரகசியத்துள்ளதாகும்.

பாடியவர் இவரேயாம். மேற்கூறியவற்றால் இவ்வொப்பிலாமணிதேசிகர் இன்னாரிடம் கல்விபயின்றார் என்பது இனிதுவிளக்கப்பட்டது.

இவர், 'தியாகர்சந்நிதியில் வரிசைபெறுந்தலைமைபூண்டோன்' என்பதற்கிணங்க, வீதிவிடங்கப்பெருமானது வாயில்வித்துவானென்றும், தமிழ்மொழிப்பண்டாரமென்றுஞ் சொல்லப்பெறுவர். பங்குனித்திருவிழாவுக்கு, முதற்றினத்துத் துவஜாரோகணமானவுடன் பெரிய கணக்கப்பிள்ளையைக்கூஉய் ஓலையெழுதுவித்துப் பின்னர்த் தமிழ் மொழிப்பண்டாரத்தைக்கூஉய்த் திருமுகமெழுதுவித்துப் பலர்க்கும் அனுப்புவது இன்றும் நடைபெற்றுவரும்வழக்கமாம். அன்று இவர்களைச் சிவிகையிலேற்றுவித்துத் தியாகேசர்சந்நிதியினின்றும் வீடு சேர்த்துவருகின்றனரென்ப.

இவர் திருவாரூரிற்றங்கியபிறகு வெகுகாலம் கும்பகோணக்ஷேத்திரத்திலேயே தங்கியிருந்தாரென்று தெரிகிறது. கும்பகோணப்புராணம் பாடியரங்கேற்றிய கி. பி. 1704-முதல் சிவரகசியம்பாடியரங்கேற்றிய 1718-வரை அவ்வூரிலிருந்திருப்பாரென்பது சில காரணங்களாற்றெளியப்படும். ஆயினும் வைத்தியநாததேசிகர், மலையாளம் திருநெல்வேலி முதலான இடங்கள் சென்றுவந்து திருவாரூரிற்றங்கிய முதுமைப்பருவத்தில் அவரிடம் ஒப்பிலாமணிதேசிகர் கல்விபயின்றவரென ஊகிக்க வேண்டியிருக்கிறது. இவ்வைத்தியநாததேசிகர்பரம்பரையினர் 75, 80, 82 வய்துக்குப்பின்னரே காலகதியடைந்தவர்களென்பது கர்ணபரம்பரைச்செய்தியாவதோடு கண்கூடாகக்கண்டதுமாம்.

இந்நூலரங்கேறியகாலம், "மன்னர்புகழ்சரபோஜிமகாராசராசன் மாநிலங்காத்திடுநாளிற்றஞ்சைநகரதனிற் றுன்னுமேவிளம்பியுற்றமகர மதியைந்தில்", என்பதால், தஞ்சையையாண்ட மகாராஷ்டிரஅரசர்களுள் முதற்சரபோஜிமகாராஜாவினது ஆட்சிக்காலமாகிய கி. பி. 1711 முதல் 1728-க்குள்வரும் ஏவிளம்பிவருஷமாம். இது சாலிவாகனசகம் 1640-ல் வருகின்றது. இதனோடு 78 கூட்ட ஆங்கிலஆண்டு 1718 ஆகும். சரபோஜிமன்னர் பலராகலின், ஏவிளம்பிவரப்பெற்றவரதுகாலமும் நமது ஆசிரியர் இருக்கக்கூடியகாலமும் இப்போதுகூறப்பட்ட காலமேயாக இவர் முதலாம்சரபோஜியாவர். இவரதுபிதா சகசிமஹாராஜாகாலத்துத்தான் ஆசிரியர் கும்பகோணப்புராணத்தை அரங்

கேற்றியுள்ளார்.. ஆகலின் இவர் சாலிவாகனசகம் 1640-ல் செல்லா நின்ற ஏவிளம்பிவருடம் தைமீ 5உ. ஸ்திரவாரம் திரிதியைதிதி சதய நக்ஷத்திரம் சித்திநாமயோகமும் அமிர்தயோகமும்கூடிய சுபதினத்தில் சரபோஜிமன்னரவைக்களத்தே, பொன்மாறைத் தீராதவினைதீர்த்தானும், பூரகைப் புன்னைவனநாதனுங்கேட்ப இந்நூலை அரங்கேற்றினாரென்பது பெறப்படுகிறது.

சோதிஷகணிதப்படி ஏவிளம்பிவருஷப்பிரவேசம், அதற்குமுற்பட்ட துர்முகிவருஷ பங்குனிமீ 30உ சனிக்கிழமை 44-நாழிகை 16 விநாடி 15-தர்ப்பரைக்குப்பிறக்க, அடுத்ததினமான ஞாயிற்றுக்கிழமை முதற்றேதியாயிற்று. வருஷப்பிரவேசமானநாளுக்கு நாலாநாளே தைமாதப்பிரவேசமாகுமாதலால், சனியினின்றும் நான்காநாளாகிய செவ்வாய்க்கிழமை பகல் 23-நாழிகை 46-விநாடிக்குத் தைமாதப்பிரவேசமாயிற்று. அதினின்றும் ஐந்தாநாள் ஸ்திரவாரமாயிற்று.

இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர்-சோமசுந்தரதேசிகன்.

உ

தமிழபிவிருத்தி.*

உலகத்துள்நிலாவிவருகின்ற பலவகைப்பட்டபாஷைகளில், நந்தம் செந்தமிழ்ப்பாஷையானது ஒரு அழகியபாஷையாகும். திராவிட பாஷைகளிற் புராதனமானதும் திருத்தமானதும் திருவுற்றுவிளங்குவதுமாகிய நந்தம்செந்தமிழ் நாளடைவிற் றேய்வுறுது, மேலும்மேலும் ஓங்கி, உன்னதமடையச்செய்யவேண்டியது உத்தமர்களுடையகடமையாகும். பாஷையைவளர்க்குங்கடமை பாஷையைப்பேசும் ஒவ்வொருவருக்கும் பொறுப்பாயிருக்கிறதென்பதை மறுக்கக்கூடியவர் யாவர்? பாஷையைத்துறந்தாற் பாவிகளாவோம், பரதேசிகளாவோம். நமது பாஷை யபிவிர்த்தியடையாது நாளுக்குநாள், குன்றி நலமற்றுப்போகுமானால், நாமும் குன்றி நலமற்றுப் பலமற்றுப்போவோம்! அறிவை

---

* இது, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் பதின்மூன்றும்வருஷக்கூட்டத்திற் படிக்கப்பெற்றது.

வளர்த்து, ஞானத்தைப்பெருக்கி, இகவிஷயத்திலாஹுலும், பரவிஷயத்திலாஹுலும், ஏற்றமடையும்நோக்கமுடைய அறிவாளிகள் எல்லோருக்கும் ஆத்துமாவைவிடப் பாஷையானது அரியதொரு பொருளாகும்! பாஷையைவளர்ப்பதானது கண்ணில்லார்க்குக் கண்ணளித்து, உணர்விலாருக்கு உணர்ச்சியைக்கொடுத்து, அறிவுடன் கலந்த ஆனந்தத்தை அபரிமிதமாய்த்தந்து, எங்குப்பார்த்தாலும் இங்கிதமே, எதைப்பார்த்தாலும் இன்பமயமே, எல்லாம் விளக்கமே, எல்லாம் ஒழுக்கமேயாக, எல்லாவற்றிலும் உயர்வையளிக்கும்.

பாஷையைவளர்த்தலானது மேலான நமதுகடமையாயிருக்கின்றது. எல்லாவிதமான சீர்திருத்தங்களுக்கும், எல்லாவிதமானநன்மைகளுக்கும், எல்லாவிதமான ஏற்றங்களுக்கும் நமதுபாஷையைவளர்த்து இலக்கியத்தைப்பெருக்கலே நாகரிகமானமுறை, நன்மையானவழியென்று நாமெல்லோருமுணர்ந்து அதைக் கடைப்பிடித்தொழுகவேண்டும். இலக்கியத்தையொழித்து இகபரசாதகத்தைநாடுவது, அஸ்திவாரமில்லாது அரமனைகட்டமுயல்வதுபோலாம்!

ஜனசமூகச்சீர்திருத்தமென்கிற(Social Reform)விஷயத்திலாஹுலும், துரைத்தனத்தாரிடம் நம்குறைகளைக்கூறி அவைகளைப்போக்க முயலும்விஷயத்திலாஹுலும், வேறெந்தவிஷயத்திலாஹுலும், நாம் சரியாகநடந்து, நம்கோரிக்கைகளை ஈடேற்றிக்கொள்வதற்கு, பாஷை உதவியில்லாவிடின், பலனென்பது கிட்டவேகிட்டாது. இதையறியாது இங்கிலீஷிலேயே தலைமுழுகியசில்லோர், அபிமானமென்பதை யறவேயொழித்து, ஆகாயத்திலிருந்து அப்போதுதான்குதித்ததுபோலும், சீமையிலிருந்து அப்போதுதான் இறங்கினதுபோலும், தலைகால்தெரியாது, சொந்தத்தேசத்தையிகழ்ந்து, தந்தம்பாஷையைமறந்து, "பெற்ற வயிற்றினைப்பெருநோய்செய்வான்பிறந்தார்களே" யென்று பெரியாரொருவர் திருவாய்மலர்ந்தபடி, வீணாரவாரஞ்செய்து போராட்டம் விளைப்பார்களேயன்றி, உத்தேசித்தகாரியத்தை வெகுலேசாய்ச்செய்ய அவர்களாலாகாது.

ஆங்கிலநூல்கள்வாசித்த அற்புதர்கள் அநேகர், மேதக்கஅபிப்பிராயங்களையும், மேன்மையான நோக்கங்களையும் சீர்திருத்தங்களையும் சிறப்புக்கொள்கைகளையும், மேடையில்நின்று ஆங்கிலத்திற்பேசிவிட்டு,

மனத்தாலும் வாக்காலும் நடத்தையாலும், மாண்புடைய தமது சொந்தப்பாஷையையிகழ்ந்து, வீட்டிற்குவந்ததும் அவர்கள்பேசியதை யெல்லாம் ஏட்டுச்சுரைக்காயாக்கிவிடுகிறார்கள். ஏன்? தந்தைதாயர் பேசுவதும் தமிழ், தாரம்பேசுவதும் தமிழ், கொஞ்சிக்குலாவும் குழந்தைகள்பேசுவதும் தமிழ், மக்கள் மனிதர்கள், உற்றாருறவினர்கள் முதற் பலர்பேசுவதும் தமிழ்! இவ்வாறு சுற்றியுள்ளவைமுற்றிலும் தமிழ்மயமாக நடுவில்நின்ற நீர் நும்கொள்கையை நாடகம்புரிந்துநாட்ட வேண்டுமென்றால், உமக்குமாத்திரந்தெரிந்து, மற்றோருக்கெல்லாம் மறைந்துகிடக்கும் அன்னியபாஷையால் அது சாத்தியப்படுமா? ஒரு போதும் சாத்தியமாகாது.

நமது இனிய தமிழ்மொழிவழியாக நம்மனோருக்கு உண்மைகளை யெல்லாமெடுத்து உளம்பதியக்கூறினாற்றான், உண்மைவிளங்கும், நன்மைவிளையும்!. சீர்திருத்தமென்றாற் செருப்படி, புதுவழக்கமென்றால் விளக்குமாற்றுப்பிரயோகம் என்று கண்மூடிவழக்கமெல்லாம் மண்மூடிப்போகவொட்டாதுகாத்து நாமெல்லாம் கரையேறவொட்டாது கடாக்ஷம்புரியும் பாட்டிக்கிழவிகளுக்கும் அவர்களைப்பின்பற்றும் வயதுக்குமரிகளுக்கும், சுலபத்திலறியலாகும் தமிழ்வழியாகப் போதனை செய்து புத்தியைத்திருப்பினால் ஆயிரம்வருஷத்திலாகாதகாரியம் அரை நிமிஷத்தில் எளிதில்முடிந்துவிடும்! இதனையறியாது, எவ்வளவெவ்வளவோ பிரயத்தனங்கள்செய்து வாய்ப்பறையாகவும் நாக்கடிப்பாகவும் இல்லாதசீர்திருத்தங்களைச் சொல்லாலேமுழக்கிவிட்டு, வீடுசென்றதும் கோடிநடப்பது, என்ன அவலக்ஷணமானசெயல்! என்ன விகாரமான நிலைமை! சொன்மாத்திரத்தில்நிற்கும் சீர்திருத்தக்காரர் (Lip Reformers) என்று கேலிசெய்து நால்வர் நகைப்பதற்குக்காரணம், வெளியிற் புருஷர்கள்சொல்லுகிறபேச்சை வீட்டில் ஸ்திரீகள் நடத்தவொட்டாமையேயாகும்.

உபந்யாஸமேடையில் ஒருபுருஷன் உன்னதமாய்நின்றுகொண்டு, ஜாதிவித்தியாசம் காரணமாக ஒற்றுமைவிடுத்து வேற்றுமைகாட்டக் கூடாதென்கிறான்! வீடுவந்ததும், பாட்டிக்கிழவி, குலம் கோத்திரம் இம்மியளவும் தவறக்கூடாதென்கிறாள்! பெண்கல்விவேண்டுமென்கிறான் ஒருவன், பெண்கல்வி கூடாதென்கிறாள் ஒருத்தி! இப்படி, பசியெடுக்கிறதென்றாற் பட்டினிபோட்டும், புளியேப்பம்வருகிறதென்றாற் பெரு

விருந்தளித்தும் , தாறுமாறுகள்செய்த சிகண்டியைப்போல, எந்தக் காரியமும் முடியவொட்டாது, எந்தச்சீர்திருத்தமும் நிகழவொட்டாது அஞ்ஞானத்திலேயே மேலும்மேலும் அழுந்தி, நாமெல்லோரும் தவிக்கச்செய்யும் நாரீரத்னங்களுக்கு நம்பாஷையிலேயே கல்வியளித்தால் நல்லசீர்திருத்தங்களெல்லாம் நான்குநிமிஷத்தில்வந்துநேரும்.

குழந்தைகளுக்குச் சீராட்டித்தாலாட்டிப் பாலூட்டும்போதே பாஷையையுமூட்டிப் புத்திபுகட்டத்தகும் புண்யவதிகளுக்குக் கல்வியறிவுபுகட்டாது, கண்மூடித்தனத்தையே பெருக்கவிட்டுவந்தால், தேசம் எப்படி க்ஷேமமடையும்; நேசம் எப்படி நின்மலமாய்விளங்கும்; உண்மை எப்படி உறுதியாய்நிலைக்கும்? பாதிப்பெயர் அஞ்ஞானாந்தகாரத்திற்பரிதவித்துநிற்க, மற்றப்பாதிப்பெயரால் மஹிமைகளெல்லாம் விளையும் என்று மனப்பால்குடிப்பது எவ்வண்ணம் பொருந்தும்? பெண்கள்மாத்திரமல்ல, புருஷர்களிலும் எத்தனைபெயர் கல்வியறிவில்லாது காலங்கழித்துவருகின்றார்கள்! கோடிக்கணக்கினராய்வாடிநிற்கும் கல்வியறிவில்லார்கள்நடுவில், அத்திபூத்ததுபோல் அங்கொருவர் இங்கொருவர், கல்வியறிவுப்பெருக்கத்தாற் கவின்மிகவடைந்து, இயற்கைப் பெரும்வளத்தால் மனத்தூய்மைமிகப்படைத்துவிளங்கும் சில்லோரால் மாத்திரம் என்னகாரியம்செய்யமுடியும். அவர்கள் செய்யக்கூடியதெல்லாம் அறிவை அபிவிர்த்திசெய்வதேயாகும்! நம் தமிழ்நாட்டாரனைவருக்கும் நல்லறிவுச்சுடர்கொளுத்தவேண்டுமாயின், நம் தாய்ப்பாஷையாகிய செந்தமிழ்வழியாய்ச் செய்யவேண்டுமேயன்றி, அன்னிய பாஷையாற்செய்யமுயறல் அசம்பாவிதமாயேமுடியும். தாயினுதரத்திருந்து தரையில் ஜனித்த அன்றுதொட்டு, நாம் ஒவ்வொருவருடனும் நன்குபழகி, அளவளாவி, கருத்துக்களையெல்லாம் திருத்தமாயுரைக்க நேர்ந்த நம் செந்தமிழ்வழியாகவே நாம் அபிவிருத்தியடையமுயலவேண்டுமேயன்றி, வேறுபாஷையை வீட்டிற்புகுத்தக்கருதுவது வீணனயோசனையேயாம்!

உருடு (Urdu)பாஷையை நம்பாஷையாய்ச்செய்துகொள்ளவேண்டுமென்றுகருதினார், லௌகிகமேதாவியார் ஒருவர்! நமக்கு ஒன்றுமே தெரியாத 'உருடு'பாஷையானது, செந்தமிழ்தன்னைச்சிதறவடித்து, நம் வீட்டிலும் வாசலிலும் தொட்டிலிலும் கட்டிலிலும் பெண்கள்

பேச்சிலும் குழந்தைகள் மழலையிலும் பிரவேசிக்கக்கூடியதாயின், ஏற்கனவே அதிகாரஞ்செலுத்தும் இங்கிலீஷ்பாஷையே நம் சுயபாஷையாகுதல்கூடாதா ? ஆங்கிலபாஷையே அரசபாஷையாயிருந்தும் நம் சொந்தபாஷையாகக்கூடாததாயிருக்க, வேறுபாஷையா நமது சொந்த பாஷையாகக்கூடியது ?

ஆயிரக்கணக்கானவருஷங்களாய் ஆயிரக்கணக்கான அரியபெரிய நூல்களில் வேரூன்றிக்கிடக்கும் வியன்பெருந்தமிழ், சுமார் இருநூறு லக்ஷம் ஜனங்களாற்பேசப்பட்டுவரும் இனிய செந்தமிழ், ஒருவரிருவராலொழிக்கப்படுமென்றாவது, சிலநாள்களுக்குள் சிதைக்கப்படுமென்றாவதுநினைப்பதைப்போற் பித்துப்பிடித்தகொள்கை எத்திக்கிலும் காணக்கிடைக்காது! நாம் விர்த்தியடைந்து முன்னுக்குவரவேண்டுமாயின், நமது சொந்தப்பாஷையாகிய சுந்தரத்தமிழை இந்தக்காலத்திற்கியைந்தவண்ணம் முந்துறச்செய்தல்வேண்டும் ; அல்லது தமிழென்கிறபெயரையே தள்ளியொழித்துத் தமிழையேபழித்து இராமாயணமாதிய பெறலருங்காப்பியங்களைக்கிழித்து நாமும் நம்மைத் தமிழரெனக்கூறாது, வேற்றுருவினராய், வேறுகொள்கையினராய், வேறு ஜாதியினராகவே மாறிவிடுதல்வேண்டும்! இருநூறுலக்ஷம் ஜனங்களும் இவ்வாறாகமாறி இவர்களுடைய ஆச்சர்யகரமான அரிய நூல்களும் மறைந்து, ஒழிந்துபோவதென்றால் அது சாத்தியமான காரியமா? அது நினைக்கத்தக்கவிஷயமா? அவ்வாறு மாறக்கூடுமென்றும், ஏதாயினும் வேறொருபாஷையை ஏற்றுக்கொள்ளக்கூடுமென்றும் நினைப்பதுபோன்ற ஆபாஸமானகொள்கை அகிலத்திற்கிடையாதென்பது என்னுடைய அபிப்பிராயம்.

தஞ்சைஜில்லாவிற் சிலவருடங்களுக்குமுன், மஹாராஷ்டிர அதிகாரம் மாட்சியுற்றிருந்தகாலத்தில் ராஜாங்கவிஷயங்களில் மஹாராஷ்டிரபாஷையே மாண்புற்றிருந்தும் கணக்குமுதலியவை மஹாராஷ்டிரபாஷையிலேயே வைக்கப்பட்டிருந்தும், அப்பாஷையானது தமிழை அழிக்கவும் நிலைபெற்றுநிற்கவுமில்லையென்று அநேகர்சொல்லக்கேட்டிருக்கிறேன். நமதுகொள்கைவலியுறுதற்கு நன்கமைந்த ஆதாரங்களில் இதுவுமொன்றாகும் என்று நினைக்கின்றேன்.

நிற்க, மேற்கூறியபடி எல்லாச்சீர்திருத்தங்களுமுண்டாவதற்கும் பற்பலஜாதியாரும் பற்பலவிதமாய், நாகரிகத்திலும், அறிவாற்றல்களி லும், பக்திவைராக்கியங்களிலும் உன்னதநிலையடைவதற்கும் செந்தமி ழபிவிர்த்தியே சிறந்தசாதனமாம். நம்பாஷையில் அபிமானமும், நம் தேசத்தில் விஸ்வாசமும் நமக்குக் கட்டாய முண்டாகவேண்டும்! இந்த அபிமானமும் இந்தவிஸ்வாஸமும் நமக்கு இல்லாதவரைக்கும் நாம் மனிதரல்லர் என்றே மதிக்கப்படுவோம், இகழப்படுவோம்! நம்பாஷை யில் நமக்கு அபிமானமுண்டாய், நம்பாஷையை நாளடைவிற் காலத் திற்கேற்றவாறு கவின்பெறச்செய்தால், பெண்களும் பேதையரும் உண்மையையுணரவும் தீமையை யகற்றவும் திறமுள்ளவர்களாவார்கள். அன்பார்ந்த நமது இராசாங்கத்தார் அரிய உரிமைகளை நமக்கு அரு ளோடுகொடுக்கவும், ஜனசமூகச்சீர்திருத்தங்கள் (Social Reforms) நன்கு நிறைவேறவும், புத்திபெருகவும் யுக்திவிளையவும், யந்திரங்களின் தந்திரங்களும், இந்தப்பிரபஞ்சத்தின் எண்ணில்லா விநோதங்களும், விஞ்ஞானசாஸ்திர (Science) வீறுபாடுகளும், வேறுபாடுகளும் மனதிற் பதிந்து மாட்சியுற்றுவிளங்கவும் வழியுண்டாம். ஆகவே, நமதுதமிழ்ப் பாஷையை நானாவிதங்களினும் நளினமுறச்செய்வதே நமது கடமை யாகின்றது.

நமது செந்தமிழ் ஏற்கனவே மேன்மையாய்விளங்கி மின்னித்துலங் குவது. திராவிடபாஷைகளில் திருத்தமுற்றதும் பெருமையடைந்ததும் நமதுதமிழேயாகும்! வடமொழியாகிய ஸமஸ்க்ருதத்துடன் தென் மொழியாகியதமிழை ஒருமைப்படுத்தினார்கள் முன்னோர், பெருமைப் படுத்தினார்கள் பெரியோர்! கீர்வாணவேதத்தைக் கேசவன்பின்னாக நிறுத்தி, திராவிடவேதமாகிய செந்தமிழ்வேதத்தை முன்னாக அமைத் தார்கள் மூதறிஞர்! தெலுங்கருக்கு வேதம்வேண்டுமானால், திருவாய் மொழிக்குவரவேண்டும், கன்னடருக்கு வேதம்வேண்டுமானால் தேவார திருவாசகங்களுக்குப்போகவேண்டும். ஆரியர்களும் தமிழின் பெருமையை அறிந்தேயிருந்தார்களென்று நினைக்க ஆதாரங்களிருக் கின்றன! அறிந்ததோடுமாத்திரமன்று, அரிய தமிழை உரிமையோடு ஆதரித்துப் பொன்னேபோற்போற்றியும்வந்தார்கள். வைணவசம்ப்ர தாயசரித்திரத்தில் இவையனைத்தினையும் காணலாம்.

இதனால், பன்னெடுநாளாய் நமதுபைந்தமிழானது மிகுந்தஸ்லாக்கியமாகக் கொண்டாடப்பட்டுவந்தது என்பதும், இந்தியாவின் இருபெரும்பாஷையி லொருபெரும்பாஷையாய்ப் பாவிக்கப்பட்டுவந்தது என்பதும் நன்குவிளங்குகின்றன. தமிழின் இனிமையைத் தமிழரே அறியவேண்டும், தமிழுணர்ந்தவரே ஊகிக்கக்கூடும்! தமிழின்கட்காணப்படும் கவிதாசாதுர்யங்களும் கற்பனுவிசேஷங்களும், இதரபாஷைகளிற்காணப்படுவனவற்றிற்கு இணைத்தனவேயல்ல. புராதனமாய் நம்தமிழிற்பொருந்தியுள்ள உத்தமநூல்களின் உயர்வைக்கூறுவான் தொடங்கி, சென்னைராஜதானிக்கலாசாலை (Presidency College)யில் பிரசிடென்சி மாஜிஸ்டிரேட் (Presidency Magistrate) ஒருவர் அக்கிராசனத்தின்கீழ், உபந்யாஸஞ்செய்தவமயத்து, அவைகளை யொருவாறுதிரட்டி அழகிய நந்தவனமாய்வருணித்திருந்தேன். அதை இவ்விடத்து ஆண்டுசெல்வது அவசியமெனத்தோன்றுகிறபடியால், அதைச் சிறிதுகூறி அப்பாற்செல்லுகிறேன்!

நமது அமிழ்தினுமினிய தமிழ்மொழிக்கு, சிங்காரம்மிகுந்த அலங்காரநந்தவனமொன்று நாம் புதிதாயமைப்பதன்முன்னர்ப் பண்டைக்காலந்தொடங்கிப் பல்லாயிரம்வருடங்களாகக் காற்றிற்கும் மழைக்கும் அனலுக்கும் அபாயங்களுக்கும் தப்பியும், ஒருவகையாயிருந்தது பலவிதமாய் மாறுபட்டும் இப்போது நாம்காண்கிற தீந்தமிழ்ப்பூந்தோட்டம் எவ்வண்ணம்விளங்குகின்றது என்பதைச் சிறிதாயினுங் கவனித்துச் செல்லவேண்டியிருக்கிறது.

“ஆஹா! அதனுடைய அழகும் அமைப்பும் நனிமிகப்பெரிதே! அதனுடைய அளவும் எல்லையும் அயனாலுங்கூறலாகாத அவ்வளவு பெரிதாய்விளங்குகின்றன. அப்பூங்காவின் உட்புறத்தி னொருபால் அரிசந்தனம், கற்பகம், சந்தானம், மந்தாரம், பாரிசாதம் என்னும் வந்திக்கத்தக்க ஐந்து பெரியவிருக்ஷங்களாய் ஐம்பெருங்காப்பியங்கள் விளங்குகின்றன. அவைகளே சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன. அவைகளின் நீழலிற் கொழுத்துத் தழைத்துப் பூத்துப் பழுத்த அநேகஞ்செடிகளும் கொடிகளும் மரங்களும் காணப்படுகின்றன. இவ்விடத்தை விட்டு இன்னொருபுறஞ் செல்லவும், ஆங்கே மனதையிழுத்து மாயஞ்

செய்து சல்லாபஞ்செய்யும் பொல்லாத மல்லிகையாகவும், முல்லையாக வும், சோகந்தீர்க்கும் அசோகமாகவும், ஏதம்நீங்க ஓதினார்தம்மையும் வாதனைசெய்யும் சூதமாகவும், காமரைவெருட்டும் தாமரையாகவும், கோவைத்துறைகளும் பற்பலகீர்த்தனைப்பதங்களும் குவிந்துகிடக்கின் றன. அவ்வாறிழுத்தமனதையும் அழைத்துக்கொண்டே பிறிதொருபக் கம்போக, அவ்விடத்திலே என்னையும்விழுங்கி என்மனதையும்விழுங்கு வேனென்று நன்றேபியற்றும் கொன்றைமாமலராகவும், களவுசெய்த கண்ணனைக்காண உளவுகாட்டி உறுதிகூறும் துளவச்செடியாகவும், ஆத்தியாகவும், அலரியாகவும், பத்திரமாகவும், புஷ்பமாகவும் பற்பலவித மாய் உற்பவித்துள்ள திவ்யப்பிரபந்தமும் திருவாசகமும் தேவாரமும் திருவருட்பாவுமாய் அநேகம்தரிசனமாகின்றன. அங்குநின்றும் சற்றுத் திரும்பினால், அப்பூந்தோட்டத்தின் நடுவில் ஆலமரம்போன்று மிகவும் பெரிய விருக்ஷமொன்றுதெரிகிறது ! அதோ அண்ணாந்துபார்த்தால் ஆகாயத்தை அளாவுகிறது, குனிந்துபார்த்தால், பாதாளத்தளவும் போய் முன்னரும்பின்னருமாக வேரோடிச்சென்று பூமியைப்பிளந்த சாமியையொத்திருக்கிறது. அதனிடம் எல்லாப்பூக்களும் உல்லாச மாய்ப்படர்ந்து சொல்லவொண்ணா அழகைத்தருகின்றன. அதன் அடி வாரத்திலுள்ள பள்ளமானது ஜலாதாரங்கொண்டுநிலாவுவதால் ஆங்கே கமலமும் குமுதமும் விமலமாய் விளங்கவும், அம்மரத்தின் உடலிலும் இலையிலும் கிளையிலும் வீழ்திலும் தொற்றித் தொடர்ந்து பற்றிப்படர் ந்து எல்லாப்பூக்களும் உல்லாசமாய்ப் பரிமளிக்கவும், போதும்போதா தற்கு ஆகாயத்தில்விளங்கும் நக்ஷத்திரங்கள்போல் மரத்தினுடைய அதிகப் பிரகாசமானபூக்கள் சொலிக்கவும், எல்லாவனப்புமமைந்த அவ் வரியபெரியமரமே தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லையென்னும்படி ஓங்கியுலகளந்த தீங்கவிக்கம்பனாற்செய்யப்பட்ட இராமாயணமாவது !

சுருக்கமாகக் கூறுமிடத்து, நம்சுந்தரத்தமிழின் நலமிக்கநூல்களில், ஆழ்வார்கள்பன்னிருவர் அருளிச்செய்த அற்புத நூல்களும் நால்வர்திருவாய்மலர்ந்த ஞானப்பாடல்களும், கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பன் நமக்குத்தந்த கவிதாரத்னங்களும் மேதினியெங்கும் மின்னித்துலங்குபவையாயிருக்கின்றன. பக்திரசத்தைப் பாகெனவூற் றும் பக்தர்கள்தமிழ்முன்னும், கற்பனாலங்காரத்தைக் கற்கண்டெனச் சொரியும் கம்பன்கவிமுன்னும் எந்தப்பாஷைநூல்தான் எதிர்த்து

நின்று ஏகாதிபத்தியஞ்செலுத்தும்? இன்னிசையோடுதுலங்கும் நன்ன யத்தமிழாகும் நால்வர்தமிழ், அற்புதத்தமிழாகும் ஆழ்வார்தமிழ், அலங்காரத்தமிழாகும் கம்பன்தமிழ், நீதியைப்போதனைசெய்யும் வள் ளுவர்போன்ற வேதத்தமிழ்,—இவைகளையும், கன்னெஞ்சையும் கரை வித்து, வன்னெஞ்சையும் வளப்படுத்திப் பக்திக்கடலில் நம்மை மூழ்கச் செய்யும் பின்னோர்சிலரது பெருமையுள்ளநூல்களையும் நம்தமிழ்ப் பாஷையானது பெற்றிருக்கிறவரைக்கும் இலக்கியவன்மையில் நம்மைக் குறைவாய்நினைத்தல் முடியாது.

கம்பன்பாடல்களின்கருத்தையறிந்தும், கம்பன்பாடல்களின்சொற் சுவைதெரிந்தும், கம்பன்பாட்டைக் காதலிக்காதவர் யாவரிருக்கக் கூடும்! கம்பனைக்காட்டிலும் கவித்திறம்வாய்ந்தவர்கள் யாரிருக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஷேக்ஸ்பியரும் (Shakespeare) மில்டனும் (Milton) கிரீக்குபாஷையில் ஹோமரும் (Homer) லாடின் (Latin) பாஷை யில் விர்ஜிலும் (Virgil) ஸம்ஸ்கிருதத்திற் காளிதாசனும்போலவே, தமிழில் அற்புதக்கவிதாசாதுர்யம்வாய்ந்தவன், கம்பனேயாவன்? ஷேக்ஸ்பியர்நாடகத்தில் அங்குமிங்கும் அற்புதம் காணலாம்! கம்பன் பாடல்களிற் சொல்லெல்லாம் நவரத்தினம்! இவையெல்லாம் இசைவள முடையது! போக்கெல்லாம் நாடகப்போக்கு! நாடகமெழுதாமலே நாடகச்சுவைகாட்டினான் நந்தம் கவிச்சக்ரவர்த்தியாம் கம்பன்! பக்திப்பாடல்களும் பரவசம்விளைக்கும்பாடல்களும் செந்தமிழிற் போலவே, ஸம்ஸ்க்ருதத்திலிருக்கின்றனவென்றுநினைக்க இடமில்லை யென்றார் ஜஸ்டிஸ் சதாசிவ ஐயர். (Justice Sadasiva Aiyer) தற் காலம் அது ஜீவபாஷையாயில்லாதிருப்பதாலே அப்படியிருக்கக்கூடு மென்றுநினைப்பதற்கு நியாயமிருக்கிறது.

மேற்சொன்னவைகளாலே, கவித்திறத்தில் நந்தம் செந்தமிழ் எந்தப்பாஷைக்கும்குறைந்ததாயிருக்கவில்லையென்று ஏற்படுகின்றது. ஜகதலம்புகழும் ஷேக்ஸ்பியரைவிடக் கவித்தலம்புகழும் கம்பன் எவ் வளவோ மேன்மையானவனென்பது என்னுடைய அபிப்பிராயம். நந்தம்பெருமை யிவ்வாறாக, நாம் இன்னும் முன்னுக்குவரவேண்டுவ தற்கும் நம்தமிழ் இன்னும்செம்மையடைவதற்கும், தற்காலவேறு பாடுகள்சம்பந்தமாகத் தற்காலம் நம்மிடம்காணப்படும்குறைக ளின்ன வெனக்குறித்தறிதல்வேண்டும். நாம்விர்த்தியடைவதற்கு நம்பாஷை

விர்த்தியடையவேண்டும். பாஷைவிர்த்தியடைவதற்கு இலக்கியம் மேன்மையுறவேண்டும்! இலக்கியம் இன்றேல் இலக்கணமில்லை! இலக்ஷணமில்லாவிட்டால் அவலக்ஷணமே எல்லாமென்பது சொல்லாமேயமையும்.

நம்பாஷை விர்த்தியடைவதற்கு நான்குதடைகளுண்டென எனக்குத்தோன்றுகிறது.

முதலாவது:—அருமையற்றசுவடிகளுக்குப் பெருமையேற்படுவது. சிலவருடங்களுக்குமுன்வந்த என்ஸைக்ளோபீடியா (Encyclopœdia) என்னும் வித்தியாமண்டல வியன்பெருநூலார், தமிழைப்பற்றிப்பேசிக்கொண்டுவரும்பொழுது, தற்காலம், தமிழ்ப்புஸ்தகங்கள் அநேகம் வெளிவருகின்றனவென்றும் ஆனல், அவைகளிற் பெரும்பாலன சத்தையற்ற சொத்தைச்சுவடி (trash) களாயிருக்கின்றனவென்றும் கூறுகிறார். அன்னியர்கள் கூறுகிறார்களென்று அவர்கள் மீது ஆயாசப்படுவது அதர்மமானகாரியம். என்ஸைக்ளோபீடியா (Encyclopœdia) வில் மேற்சொன்னவாறுகூறப்பட்டிருக்கிறது, எவ்வளவோ சரியென்று எனக்குத்தோன்றுகிறது. நல்லபுஸ்தகங்களுக்கு நல்லபிமானமேற்படாதிருக்க, நலமற்றசுவடிகளுக்குப் பலமேற்படுவது தேசத்தின் அபிவிருத்தியை நாசஞ்செய்யும்வழியாகும். ஜனங்களுக்கு இலக்கியத்திற் சரியானருசியேற்படாதிருப்பதே மேற்சொன்ன சிறுநூல்களுக்குமேன்மையுண்டாகச்செய்கின்றது. அபிப்பிராயங்களும் ஆபாஸம், சொற்களுபயோகித்தலிலும் (stupidity) மூடத்தனம் இவைநிறைந்துள்ள சுவையற்றபுஸ்தகங்கள் புற்றிலிருந்து ஈசல்புறப்படுமாறுபோல் மேலும்மேலும்வெளிவந்து, ஜனங்களுக்கு இயற்கையிலுள்ள சொற்ப அறிவையும் பறக்கடித்துவிடுகின்றன! ஒருநாம மோருருவமில்லார்க்கு ஆயிரம்திருநாமம்பாடி நாம் தெள்ளேணம்கொட்டாமோ என்று உன்னதவிஷயத்தில் ஒருவர் கூறியுள்ளபடி, அற்பவிஷயமாகிய ஆபாஸப்புத்தகங்களியற்றுவதில், ஒருநாமத்திற்கு முரித்தாகாத உபயோகமில்லாத புத்தகங்களுக்குத் திருநாமமிடும் திவ்யத்தைப்பாருங்கள். தண்டசோற்றுத்தடிராமன் கதை, ரேணபுடுங்கிரிஷிபாடல்கள் என்று இவ்வாறு கண்டபடி எழுதிக் கண்டபடி அவைகட்குப் பெயரிட்டு ஜனங்களை ஏமாறவைத்து மோசஞ்செய்து காசுபறிப்பதே எங்குப்பார்த்தாலும்வழக்கமாய்விட்டது. நல்லபுத்தகங்களென்றல் ஜனங்களுக்கு விருப்பமென்பது

கிடையாது. மனதைக்கெடுத்து அறிவைமயக்கி ஆபாஸத்திலிழுத்துக்கொண்டுபோகும் புஸ்தகங்களென்றால், ஆயிரக்கணக்காய்ப் பேயெனப்பறந்து வாங்குகிறார்கள்! அத்தகைய ஆபாஸக்கந்தல்களில், அநுசிதமாயெழுதும் அற்பவிஷயங்களைச்சொல்லவென்றால் நாவும் எழவில்லை; எழுதவென்றாற் கையும்வரவில்லை; நல்ல உணவென்றால் நாக்கசந்து, ஆகாத உணவிற்கே ஆவல்கொள்ளும், ஜ்வரம் முதலிய சிற்சில கொடியரோகங்களில், எப்படி மருந்தைக்கொடுத்து, ஏறுமாறானசுவைகளைத் தாறுமாறில்லாதிருக்கச் செய்கிறோமோ, அப்படியே உத்தமமானநூல்களாலும் உயர்வானபிரசங்கங்களாலும், ஜனங்களுக்குச் சரியானநூல்களில் விருப்பமுண்டாகவும், நல்லநூல்களுக்கெல்லாம் பெருமையுண்டாகவும், அதனால் அறிவென்பது கொழுந்துவிட்டு ஆனந்தம்விளையவும் ஆபாஸங்கள் ஒழியவும் செய்யவேண்டியது நமதுகடமையாயிருக்கின்றது.

இரண்டாவதுதடை யாதெனின், ஆங்கிலம்பயின்றநம்மவருக்கு அபிமானமின்மையேயாம். கல்வியறிவில்லாத காட்டுமிருகங்கள் போன்ற நாட்டுப்புறத்தாரிடம் சிற்சிலவேளைகளிற் பற்பல நற்குணங்களும் மிகுந்த அபிமானமும் காணலாம். மேதாவிகளான மேனாட்டுப்புலவர்களின் அற்புதநூல்களை அருமையாய்ப்பயின்ற ஆங்கிலப் பட்டதாரிகள் பல்லோரிடம் அபிமானமென்பது அறவே காணுதொழிகின்றது. ஆயிரமாயிரமாய் ரூபாவந்தாலும் அன்னோர்கள் அரைக்காசுக்கு ஐம்பதுமுடிபோட்டு, தமிழ்விஷயத்திலென்றால் ஐயாயிரம்முடியும்போட்டு, சாக்குப்போக்குகள்சொல்லி ஒத்தாசைசெய்யாமலே கையை உதறிவிடுகிறார்கள். தமிழ்ப்புஸ்தகங்களைவாங்க விருப்பமுள்ளவர்கள்போலவும், தமிழ்ப்பாஷையை ஆதரிக்க அவாக்கொண்டவர்கள்போலவும் தயாளக்கொக்குகளாய்விளங்கும் தனவந்தர்களாகும் அன்னோரிடம்சென்று பாரதம்வாங்குகிறீர்களாவென்றால், இராமாயணம் இல்லையாவென்பார்கள். இராமாயணமிருக்கிறது வாங்குகிறீர்களாவென்றால், பாரதம்தான்ஸார் வேண்டியது அதில்லையோவென்பார்கள்! பாரதமும் இராமாயணமும் இருக்கின்றனவென்றாற் பகவத்கீதையில்லையோ, பாகவதம் இல்லையோவென்பார்கள். எல்லாமிருக்கின்றனவென்றால் ஒன்றும்வேண்டாமென்பார்கள்! கால

மில்லையென்பார்கள் ! வேலையில்லையென்பார்கள் ! ஆங்கிலக்கருத்துக்களைப் பாங்குபெறவமைத்துள்ள நூதனவழியிலாம் நட்பநூல்களிருக்கின்றனவென்றால், ஆங்கிலத்திற் படித்துவிட்டோம், அநுவசியம் தமிழில் என்பார்கள்! பண்டிதமுறையிற் பதிற்றுப்பத்தந்தாதிசெய்துளோம், பெற்றுக்கொள்கிறீர்களாவென்றால், பாட்டிகதையாலும் பாட்டுப்பாடுவதாலும் எமக்குப் பயனேகிடையாது என்பார்கள். இப்படியாக ஏட்டிக்குப்போட்டிசெய்து ஏறுமாறாகத் தாறுமாறுகள் பேசி இலக்கியவழியில் உழைப்பவர்களை இளைப்பாக்கிவிடுகிறார்கள். கனவான்களே! தனவான்களே! உங்களையும் உங்களைப்போல்வாரையும் யான் குறைகூறவந்தேனல்லேன். நமதுசங்கத்தின் கன அக்ராசனாதிபதியாம் அரசிளஞ்சிங்கத்தின் ஆதரிப்பினாலும், உப அக்கிராசனாதிபதியின் உதவிப்பெருக்காலும், ஓய்வில்லாதுழைத்து, நமது சங்கத்தின்பாங்கையேகவனித்துத் தமிழின் அபிவிர்த்தியையேதியானித்து, வக்கீல்களாயிருந்தபோதிலும், வைகறைமுதல் நள்ளிரவு வரையில் அவையிரண்டின்விஷயமாகவும் பலவிதமான எண்ணங்களை எண்ணிக்கொண்டிருக்கும் இளைப்புச்சலிப்பில்லாத காரியதரிசிகள்கவனவிசேஷத்தாலும், உங்களுடையவும் உங்களைப்போன்றவர்களுடையவுமான அபிமானவிசேஷத்தாலும், கொஞ்சமாவது இந்தத்தமிழ், குலாவிநிற்கின்றது. இலக்ஷக்கணக்காயுள்ள ஏனையோருக்கு அபிமானமென்பது பேருக்குங்கூடக் கிடைக்கவேகிடையாது. இந்தவிதமான இழிகுணம்நந்தம் மனிதரிடம் நிலைபெற்றிருப்பதனாற்றான் நம்நாடு இந்தநிலைமைக்குவந்துவிட்டது. இனி எந்தநிலைமைக்குச் செல்கிறதோ !

அன்பாய் நம்மை அரசாளும் ஆங்கிலர்முதலானோர் தேசங்களில், லக்ஷக்கணக்கானபுத்தகங்கள் பதிப்பானதக்ஷணமே விலையாகின்றன! ஆங்கிலேயர்களுக்குள் அம்பட்டன் முதல் அரசர்வரைக்குமுள்ளவர்களுக்கு அபிமானமென்பது அதிகமாயுண்டு. காலம்சென்ற இராமஸ்வாமிமுதலியாரவர்கள், எம். ஏ., பி. எல். இங்கிலாந்துசென்றிருந்த இரண்டொருசமயத்தில், அம்பட்டனொருவன் (France) பிரான்சுதேசத்தில் இரவு பன்னிரண்டுமணிக்குநடந்த இராஜாங்கவிஷயத்தைக் காலை 6-மணிக்கெல்லாம், முதலியாரவர்களிடம்கூறி முக்கால் மணிநேரம் (Political Philosophy) இராஜகாரியவிஷயத்தைப்பற்றி

நேர்த்தியாய்ப்பேசினகீர்த்தியை அவர் அடிக்கடிசொல்லிக்கொண்டிருப்பாரெனக் கேள்வியுண்டு. எத்தனையோபுஸ்தகங்கள் ஒருமாதத்தில் எப்படியெப்படியோ விலையாய்விடுகின்றன! ஒருமாதத்துக்குள் ஒருபதிப்புத்தீர்ந்துவிடுகின்றது. நம்நாட்டில் புஸ்தகம்பதிப்பவர் முதலில் ஆயிரம்ரூபாய்செலவழித்துவிட்டுப் பின் அரைக்கால் அரைக்கால் ரூபாயாய் ஐம்பதுவருஷம் சேர்க்கவேண்டியிருக்கிறது.

நம்மவர்களுக்குள் அபிமானமாத்திரம் கிடையாது. ஆசைமாத்திரம் அதிகமாயுண்டு. லக்ஷக்கணக்கான ஜனங்களில் உங்களைப்போற் பக்ஷமுள்ளவர்கள் சிலரே. பாஷைவிஷயத்தில் அபிமானமுள்ளவர்கள் சிலரே! ஏராளமாய்க் கையிற் பணம்வைத்துக்கொண்டுள்ளவர்கள் படாடோபத்திற்கென்றும், பாதகவிஷயங்களுக்கென்றும் தனத்தைச் செலவிட்டுத்தரித்திரமடைந்தாலும் அடைவார்களேயன்றி நம் பாஷையபிவிர்த்தியடைவதற்கும், நம் இலக்கியவன்மைபெருகுவதற்கும் அதனால் நாடும் விர்த்தியாய் மனிதரும் விர்த்தியடைவதற்கும் நாட்டங்கொள்வாரல்லர்! இத்தகைய அபிமானமின்மையை அறவே ஒழிக்கத்தக்கவழிகளை அதிசீக்கிரத்திற் கண்டுபிடிக்கவேண்டும்.

மூன்றாவதுதடை:— அசூயை, பக்ஷபாதம் முதலிய கெட்ட குணங்கள் அதிகமாய் நம்மவரிடம் காணப்படுகின்றன. கொள்ளிக்கண்ணனைச் செந்தாமரைக் கண்ணனென்பதும், உன்னதநிலைவாய்ந்தவனை உருட்டித்தள்ளுவதும் நம்மவரநேகருள் வழக்கமாயிருக்கின்றது. இந்தக் கெட்டகுணம் இந்துதேசத்தில் எந்தக்காலத்திலும் காணலாம். இதை நாம் அகற்றும்வரைக்கும், இந்தியாதேசம் முந்துற நடப்பதுகூடாததாகும். ஆதலாற் கற்றவரும் மற்றவரும் அசூயை, ஓரவஞ்சனைமுதலியகுணங்களை ஒழித்தேதீரவேண்டும். மனிதஇயற்கையில் அவை வெகுசாதாரணமாய்க்காணப்பட்டபோதினும், நம்மவரிடம் அதிகமாய் அது விளங்குவதால், அதை ஒவ்வொருவரும் ஒழிக்க உடனேமுயலவேண்டும்.

நான்காவதுதடையை நாம் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். நாளடைவிற் பாஷைவளருகிறதென்பதையும், பழையனகழிதலும் புதியனபுகுதலும் என்கிற நியதி நம்மிடத்தும் உள்ளது, நாமும்

கவனிக்கவேண்டுமென்பதையும் நாம் மறத்தல்கூடாது. இலக்கணத்திலும் மாறுதல்கள் இலக்ஷக்கணக்காய் ஏற்படுகின்றன. காலபேதங்களால் இலக்கியமாறுபாடுகளும் கணக்கிலாதுண்டாகின்றன. இதை நாம் ஒவ்வொருவரும் கவனித்து, காலத்திற்கேற்றவாறு கருத்துக்களைத் திருத்திக்கொள்ளவேண்டும்.

இவ்வாறு செய்வதிற் புதியசொற்கள் தமிழில்வந்து நுழைவதும், இலக்கணமுடிபுகள்பிறழ்ந்துசெல்வதும், பழையசொல்லுருவங்கள் மாறிப் புதியசொற்களாக உண்டாய்விடுவதும் கூடுமென்பதை உணரவேண்டும். சோப், பொத்தான் (Soap, Button) முதலிய பற்பல பதங்கள் தமிழில் சர்வசாதாரணமாய்ப் பரவிவருகின்றன. அர்த்த பேதங்களும் அநேகமுண்டாகக்கூடும்.

தற்காலத்திற்கியைந்தநூல்களியற்றுவதில் (Critical works) கிரிடிகல் வொர்க்ஸ் என்கிற ஆராய்ச்சிவியாசங்களும், (Historical Researches) சரித்திர ஆராய்ச்சிக்கிரந்தங்களும், புதுமாதிரியான பாடற்றொகுதிகளும், ஆவல்விளைக்கும் நாவல்களும், விஞ்ஞானகிரந்தங்களும் பொதுநன்மைக்கியைந்தவையும், ஆலோசனைத்திறத்தை அபிவிருத்திசெய்பவையுமான வேறுவேறுவகைப்பட்டவியாசங்களும்,இவைபோன்றவை வேறுபலவும் மிகவும் அவசியமானவை.

இவ்வாறாக நாம் இயற்றமிழையும், இசைத்தமிழையும், நாடகத்தமிழையும் நன்றாகவிர்த்திசெய்வோமானால், நம்மை அவமதித்து நம்பாஷையை அவமதித்து, நம்மைக்குறைகூறுவதே நானிலத்தில் தோன்றாது. பொதிகைமலையிலூற்றெடுத்த புண்ணியத்தமிழ், வைகையிற்பரந்து காவிரியிற்சுரந்தகற்பகத்தமிழ், கவிராயர்மனத்திலும் புவிராயர்மதிப்பிலும் பொங்குகின்ற புத்தமுதாம்தமிழ் மேன்மேலும்விர்த்தியடைந்து, மேன்மேலும் பெருமையடைந்து, மேன்மேலும் ஒளிபரப்பி, மேன்மேலும் சுவைபெருக்கி மின்னித்துலங்கும்.

பக்தவத்ஸலம்.

உ

சோழர்குடி.

நமது தமிழகத்தின்கட் செங்கோலோச்சிய முடியுடைத்தமிழ் வேந்தர்மூவரில் இக்குடியினர் சோணாட்டையாளும் உரிமைபூண்டவ ராவர். இவர்கள் இடைக்கட்புகுந்து இந்நாட்டைத் தம்மடிப்படுத்தி யாண்டவரல்லரென்பதும், படைப்புக்காலந்தொட்டே இந்நாட் டின் அரசுரிமைபூண்டவர்களென்பதுஞ் செந்தமிழ்ப்பெரியோர்கொள் கைகளாம். இதனை, "வழங்குவதுள்வீழ்ந்தக் கண்ணும்பழங்குடி-பண் பிற்றலைப்பிரிதலின்று" (திருக்குறள்-குடிமை 5.) என்பதன்உரையில், 'பழங்குடி - தொன்றுதொட்டுவந்தகுடி; தொன்றுதொட்டுவருதல் சேர சோழ பாண்டியரென்றாற்போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டுவருதல்' என்று ஆசிரியர்பரிமேலழகர்கூறியவற்றால் நன் கறியலாம்: இக்குடியினரதுநாடுதான் புனனாடெனப்படுவது; இவர் கள்தான் வளவரென்றுசிறப்பித்துப் போற்றப்படுவோர்; இவர்கள் நாடேசோறுடைத்து; இவர்கள்நாடுதான் எண்ணிறந்தசிவாலயங்க ளைத் தன்னகத்துக்கொண்டுவிளங்குவது; இவர்கள்தான் சைவசம யத்தைப்போற்றிவளர்த்துவந்த உத்தமச்சைவசீலரெனப்படுவோர். 'வளவனாயினுமளவறிந்தழித்துண்' என்னும் முதுமொழியில் இக் குடியினரே பொருட்செல்வத்தின்மேம்பாட்டிற் கோரெல்லையாக வைத்துக்கூறப்பட்டிருத்தல்காண்க. பலசொல்லியென்? மூவேந்தருள் ளும் சோழர்தாம் உணவுப்பொருள்களுஞ் சிவாலயங்களும் மிகுந் துள்ள நீர்வளம்பொருந்தியநாடுடையார் என்று சிறப்பிக்கப்படுவா ரென்க.

கறவைமுறைசெய்தகாவலனும் புள்ளுறுபுன்கண்டீர்த்தபுரவல னும் இக்குடியிற்றோன்றியோர்களேயெனின், இக்குடிக்கு, யான் வேறு ஏற்றமுங்கூறவேண்டுமோ? பாண்டியர்களைப்போன்று இவர் கள் தமிழ்ச்சங்கம்நிறுவாவிடினும் செந்தமிழ்வளர்த்தபெருமையில் அவர்கட்கு இவர்கள் சிறிதுங்குறைவுபட்டிலரென்பது பழையசங்க நூல்களையும் பிறநூல்களையும் ஆராய்வார்க்கு நன்குபுலப்படாமலி ராது. என்னை? பதினாறுநூறாயிரம்பொன்னீந்து பட்டினப்பாலை

கொண்டோன் கரிகால்வளவனன்றே? பதினொருசைவத்திருமுறைகள், திருத்தொண்டர்புராணம், கம்பனது இராமாவதாரம், வீரசோழியம் முதலிய அருமைவாய்ந்த நூல்களெல்லாம் இவர்களதுவள்ளன்மையாலும் பெருமுயற்சியாலுமன்றே நம்மனோர்கண்டுகளிக்கும் வண்ணம் வெளிவந்துள்ளன.

இவர்கள் சூரியவம்சத்தைச்சேர்ந்தவர்கள்.* இவர்கட்குரிய போர்ப்பூவுந் தார்ப்பூவும் முறையே ஆத்தியும் முல்லையுமாம்; கொடி புலிக்கொடியாம். பண்டைக்காலத்து இவர்களது தலைமைநகரங்கள் உறையூரும் காவிரிப்பூம்பட்டினமுமாயிருந்தன; பின்னர்த் தஞ்சையும் கங்கைகொண்டசோழபுரமும்; காஞ்சியுந் தலைமைநகரங்களாயின.

இக்குடியிற்றோன்றிச் சோணாட்டையாட்சிபுரிந்தமன்னர் பலராவர். இவர்களதுசரிதங்கள் முழுதுந் தொடர்ச்சியாய்த்தற்காலத்து அறிந்துமகிழ்தற் கிடமில்லாமற்போயின. ஆயினும், திருவுடையரேயன்றித் தெள்ளியருமாய்த்தோன்றி வீரமும், புகழும் என்றும் நின்றுநிலவப் பல அரும்பெருஞ்செயல்களைச் செய்துமுடித்து இந்நிலவுலகத்தைவிட்டகன்றபெருந்தகையாளர்பலர்சரிதங்கள், பழைய தமிழ்ப்புலவர்களியற்றியுள்ள செய்யுட்களினும் சிலாதாம்பிரசாசனங்களினும் அறியப்படுகின்றன. கடைச்சங்ககாலத்திற்குப்பின்னர்விளங்கிய சோழமன்னர்களின்சரிதங்களை, நன்காராய்ந்து, தொடர்ச்சியாக, ஸ்ரீமான்-T. A. கோபிநாதராயர், M. A., அவர்களும், ப்ரொபஸர் S. கிருஷ்ணஸாமி ஐயங்கார், M. A., அவர்களும் முறையே தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதிவெளியிட்டிருக்கிறார்கள். அரும்பெருமுயற்சிகொண்டு சோழசரித்திரஅமுதை நம் தமிழகத்திற்கும் புறநாடுகட்குமூட்டிக் களிப்பித்த இவ்விருபுலவர்கட்கும் நம்மவர் பெரிதும் நன்றியறிதற்கடப்பாடுடையராவர். கடைச்சங்ககாலத்திற்குமுன்னர்விளங்கியசோழமன்னர்களுள், 'வாயிற்கடைமணிநடுநாநடுங்க—வாவின்கடைமணியுகுநீர்நெஞ்சுசுடத்தான்றன்—

* இவர்களைச் சூரியவம்சத்தினரென்றுகூறுந் தமிழ்நூல்வழக்கிற்குமுரணாய், அக்கினிவம்சத்தினரென்றும் வன்னியரென்றும் தக்கபிரமாணங்களின்றி ஒருசாரார், சொல்லியும் எழுதியும்வருகின்றனர்; அன்னோர்கூற்றுப் பொருந்தாதென்க.

அரும்பெறற்புதல்வனையாழியின்மடித்த' மனுநீதிகண்டசோழனும், 'புறவுநிறைபுக்குப்பொன்னுலகமேத்தக் — குறைவிலுடம்பரிந்த' கொற்றவனுஞ் சிபியும், ஓங்குயர்மலயத்தருந்தவனுரைப்பத்—தூங்கெயிலெறிந்ததொடித்தோட்செம்பிய'னும், 'அமரமுனிவனகத்தியனருளாற்—காவிரிகொணர்ந்தகாந்தமன்'னவனும், 'வாதாபிசனைவலிந்துபணிகொண்'டோனும், 'தாங்கள்பாரதமுடிப்பளவுநின்றுதருமன்-றன்கடற்படைதனக்குதவிசெய்'தோனுமாய சிலரதுபெயர்கள்மாத்திரங் கேட்கப்படுகின்றன.

இனி, கடைச்சங்ககாலத்தில்விளங்கிய சோழமன்னர்பலராவர். அவர்களுள், புறநானூறுமுதலிய தொகைநூல்களால் அறியப்படும் சிலரை இங்குக் குறிக்கின்றேன்.

1 முடித்தலைக்கோப்பெருநற்கிள்ளி, 2 வேற்பஃறடக்கைப்பெருவிறற்கிள்ளி, 3 உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னி, 4 கரிகாலன், 5 நலங்கிள்ளி, 6 நெடுங்கிள்ளி, 7 மாவளத்தான், 8 குளமுற்றத்துத் துஞ்சியகிள்ளிவளவன், 9 குராப்பள்ளித்துஞ்சியபெருந்திருவளவன், 10 இராஜசூயம்வேட்டபெருநற்கிள்ளி, 11 கோப்பெருஞ்சோழன், 12 சோழன்செங்கணான்.

மேற்குறித்துள்ள அரசர்பெருந்தகைகளுள் உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி, கரிகாலனதுதந்தையாவன்; கரிகாலன் 12000 சிங்களவர்களைச்சிறைபிடித்துக்கொணர்ந்து காவிரியினிருமருங்குங் கரையெடுப்பித்துத் தங்கள்நாட்டைப் புனலுடனவும், தங்களை வளவரெனவும் யாவருஞ் சிறப்பித்தோதும்வண்ணம் சோணாட்டைவளமுறச்சீர்படுத்திய செம்பியரேறென்ப. நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, மாவளத்தான் என்போர் ஒரேகாலத்துச் சோணாட்டில்விளங்கியோரென்பது இவர்கள் தாயபாகத்தின்பொருட்டு ஆமூர், உறையூர் முதலிய இடங்களில் முற்றுகையிட்டுப் போர்புரிந்தசெய்தியைக்குறிக்கும் புறப்பாடல்களால் நன்குவிளங்கும். கிள்ளிவளவன் உறையூரிலிருந்து சோணாட்டையாட்சிபுரிந்தவன்; இவனுக்குவிரோதிகளாய்ச் சோழர்குடியிற்றோன்றியோ ரொன்பதின்மர் உண்ணாடுகளிற் கலகஞ் செய்துவந்தனர்; உறையூர்க்குத்தென்புறத்துள்ள நேரிவாயிலில், சேரன்செங்குட்டுவன் இவர்களைப் போரில்வென்று மைத்துனனாகிய

கிள்ளிவளவனது ஆட்சியைச் சோணாட்டில் நன்குநிலைநாட்டினு னென்பது பதிற்றுப்பத்து 5-ம்பத்தின்பதிகத்தானும் சிலப்பதிகாரத் தானும் அறியப்படுகிறது. இதனால், இக்குடியினர்பலர் இந்நாடுக ளில் யாண்டும்வசித்துவந்தனரெனத் தெரிகிறது. இவர்கள் உண் ணாடுகளிலும், சோழமன்னர்களால்ஜெயிக்கப்பெற்ற புறநாடுகளிலும் சிற்றரசர்களாகவும் தண்டத்தலைவராகவும் மண்டிலமாக்களாகவும் கோட்டம், கூறு, நாடுமுதலியவற்றின் அதிகாரிகளாகவும் இருந்து வந்தனராதல்வேண்டும். கோப்பெருஞ்சோழனென்போன், தன்மேற் பகைகொண்ட தன்மக்களிருவருடன் போர்க்கெழுந்தஞான்று புல் லாற்றூர் எயிற்றியனாரென்னும்புலவர்பெருமானாற் சமாதானஞ்செய் யப்பட்டுத் தன்னரசை யவர்கட்களித்துத் தான் வடக்கிருந்து உயிர் துறந்தனனென்பது புறப்பாடல்களால் அறியப்படுகின்றது. சோழன் செங்கணான், அறுபான்மும்மைநாயன்மார்களில் ஒருவராகவிளங்கிய வளவர்பெருமான்.

தொடரும்.

T. V. சதாசிவப்பண்டாரத்தார்,

திருப்புறம்பயம்.

உ

பிழை திருத்தம்.

செந்தமிழ் 12-ஆம்தொகுதி 2-ஆம்பகுதி சசு-ஆம்பக்கத்தி லுள்ளவம்சாவளியில் 'உருவப்பஃறேர் இளஞ்சேட்சென்னி = ஆலந் தூர்வேண்மகள்' என்பவற்றின்கீழ்க் 'கரிகாலன் = நாங்கூர்வேள்குமா ரத்தி' என்பவற்றையும், 11-ஆம்பகுதி சசக-ஆம்பக்கத்திலுள்ள 'தொண்டைமான்சாசனம் முதல்வரியில் 'ஶ்ரீவாஹநஶகாப்தம்' என்பதன்பின்னர் 'தூகூாஙமச' என்பதையும் சேர்த்துப்படிக்க.

T. V. S.